**வடமேல் மாகாண சபை - 2025**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

வடமேல் மாகாண சபையின் 2025 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2025 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் 23(1) ஆம் பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடனும் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மாகாண சபைகள் சட்டத்தின் 23(2) ஆம் பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் உப பிரிவினதும் ஏற்பாடுகளின் பிரகாரம் பொழிப்பறிக்கை 2026 மே 29 ஆந் திகதி வழங்கப்பட்டதுடன் தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் உப பிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2026 யூன் 30 ஆந் திகதி வழங்கப்பட்டது. அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரை மற்றும் தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கும், அறிக்கையின் பிரதி 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் 23(2) ஆம் பிரிவின் பிரகாரம் மாகாண சபையில் முன்வைப்பதற்காக ஆளுனருக்கும் சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ளதாக்கப்பட்ட பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து 2025 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வடமேல் மாகாண சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 ஆம் ஆண்டின் போது தீ வைக்கப்பட்டு முழுமையாக ஆளுநர் அலுவலகத்துக்கு சொந்தமாக காணப்பட்ட ரூபா 24,000,000 மில்லியன் பெறுமதியான லேண்ட்ரோவர் டிஸ்கவரி வண்டி தொடர்ந்து ஆசனங்கள் பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தன | குற்ற தடுப்பு பரிசோதனை திணைக்களத்தின் பரிசோதனை அறிக்கை கிடைத்த பின்னர் அங்கீகாரத்தை பெற்றுக் கொண்டு அகற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரணங்கள் சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மாகாண சுகாதார திணைக்களத்தின் பொறுப்பு பதிவேடு மற்றும் நிதி கூற்றுக்களில் இனங்கானப்படாத மீளாய்வாண்டின் பொறுப்புக்களின் பெறுமதி 186,097,136 ஆக இருந்தது | இவ்வாறான தவறுகளை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக | சரியான பெறுமதியை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை கெடுத்தல் வேண்டும் |
| (இ) | கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்திற்கு சொந்தமான ரூபா 3,330,000 பெறுமதியான மோட்டார் வண்டி ஒன்று பயன்பாட்டில் இருந்து நீக்கப்பட்டு இருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தத்துடன் 2025 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுகளில் நிதி அல்லாத சொத்துக்களில் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | கைதவிர்ப்பு நடவடிக்கைகளுக்காக பிரதான செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக | கைதவிர்ப்பு செய்யும் வரை கணக்கீடு செய்ய வேண்டும் |
| (ஈ) | .கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்திற்குரிய நாத்தாண்டிய பயிற்சி நிலையத்தின் நிர்மாணம் நடவடிக்கைகளுக்காக 2021 ஆம் ஆண்டிலிருந்து 2023 ஆம் ஆண்டு வரை கிடைத்த மூலதன செலவினம் ரூபா 72,635,253 தொகை மூலதனமாக்கப்படாமல் ஒவ்வொரு ஆண்டின் வருமானத்துக்கு எதிராக செலவினம் ஒன்றாக பதிவழிக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்வதாக | மூலதனமாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 19 பிரிவின் பிரகாரம் உட்கட்டமைப்பு வசதிகள் வழங்கும் சொத்துக்களின் கீழ் ஆன மின்சார முறைமை ஆதனங்கள், பொறிகள் உபகரணங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும் தீவுக்காக வழங்கப்பட்ட | நடப்பாண்டின் போது மூலதனம் ஆக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | மூலதனமாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

4,822,702 ஆன சூரிய மின்சார முறைமை செலவினம் மூலதனம் ஆக்கப்பட்டிருக்கவில்லை.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்த நிதிக் கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மாகாண சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு மாகாண திறைசேரி உள்ளடங்களாக அந்தந்த நிறுவனங்களின் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் வட மேல் மாகாண சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக் கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக் கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளரின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம் பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் முகாமைத்துவத்திற்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 நிதிக் கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்

### 1.5.1 செலவினத் தலைப்பு 201 – வடமேல் மாகாண ஆளுனர

#### 1.5.1.1 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஆளுநரின் உத்தியோகபூர்வ இல்லத்திக்காக 2025 ஜனவரி முதல் செப்டம்பர் | கொடுப்பனவிற்காக அடிப்படையாகக் கொண்ட அங்கீகாரங்கள் திட்டவட்டமாக | அதிகார பலம் இனங்காணப்பட்டு கொடுப்பனவு |

| | | |
|---|---|---|
| மாதம் வரை நீர் பட்டியலுக்காக ரூபா 104,583 தொகை மின்சாரத்திற்காக ரூபா 293,943 தொகை எரிவாயுக்காக ரூபா 43,917 தொகையாக மொத்தம் ரூபா 442,443 செலவிடப்பட்டிருந்ததுடன் அக் கொடுப்பனவிற்காக அதிகாரம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | இனங்காண்பது சிக்கலாக உள்ளது உரிய நிறுவனங்களிடம் விசாரித்து கொடுப்பனவுகள் தொடர்பாக உறுதிப்படுத்தல் ஒன்று பெற்றுக் கொள்வதற்கு எதிர்வரும் காலங்களில் நடவடிக்கை எடுப்பதாக. | செய்யப்பட வேண்டும் |

## 1.5.2 செலவினத் தலைப்பு - 203 - வடமேல் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு

### 1.5.2.1 செயலாற்றல்

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| வடமேல் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் வடமேல் மாகாணத்தின் இரண்டு உத்தியோகத்தர்கள் தொடர்பாக குற்றப்பத்திரிகைகள் வழங்கப்பட்டு 2025 ஆகஸ்ட் 31 இல் உள்ளவாறு 1 ஆண்டிற்கும் 2 ஆண்டுகள் 9 மாதங்கள் காலம் கடந்திருந்த போதும் ஒழுக்காற்று கட்டளை வழங்கப்படாதிருந்ததுடன் 05 உத்தியோகத்தர்கள் தொடர்பாக குற்றப்பத்திரிகைகளை வழங்குதல் மற்றும் ஒழுக்காற்று கட்டளைகளை வழங்குவதற்கு இடையே 02 வருடங்களுக்கும் 04 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலதாமதம் ஒன்று ஏற்பட்டிருந்தது | ஒழுக்காற்று பரிசோதனை ஒன்றிற்காக குற்றச்சாட்டு பத்திரம் வழங்குதல் மற்றும் பரிசோதனை ஒன்றின் பின்னர் ஒழுங்காற்று கட்டளை வழங்கப்படுவதுடன் ஏதேனும் கால எல்லைக்குள் காணப்படுவதாகவும் குற்றச்சாட்டு பத்திரம் மற்றும் ஒழுக்காட்டு கட்டளை வழங்குவதற்கு இடையே விரிவான செயற்பாடு ஒன்று காணப்படுவதாக | அசாதாரணமான காலதாமதத்தை தவிர்ப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும். |

### 1.5.2.2 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வடமேல் மாகாணத்தின் மாகாண சபை பாடசாலைகளில் காணப்படுகின்ற இலங்கை ஆசிரியர் சேவையின் 3 ஆம் வகுப்பின் 1 (அ) தரத்தின் வெற்றிடங் களுக்காக மாவட்ட அடிப்படையில் பட்டதாரிகளை ஆட்சேர்ப்பு செய்யும் பரீட்சை - 2024 மற்றும் வடமேல் மாகாண சபை அரச சேவையின் கனிஷ்ட ஊழியர்கள் வடமேல் மாகாண சபை முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் சேவையின் iii ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்பு மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2024 என்பவற்றின் விடைத்தாள் பரிசோதகர்களால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த புள்ளி பட்டியல் அழிப்பு மை இட்டு மாற்றப்பட்டிருந்தமை, ஆரம்ப சந்தர்ப்பத்தில் இடப்பட்ட புள்ளிகள் பின்னர் மாற்றப்பட்டு வேறு புள்ளிகள் இடப்பட்டு இருந்த சந்தர்ப்பங்கள் காணப்பட்டதால் ஆட்சேர்ப்பு செயற்பாட்டின் வெளிப்படை தன்மை உறுதிப்படுத்தப்படவில்லை. | வடமேல் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படுகின்ற ஆட் சேர்ப்பு பரீட்சைகளின் போது அனைத்தும் சரி செய்தவர்களின் பின்னர் பரிசோதர்களின் கையொப்பம் மற்றும் உத்தியோகபூரப் முத்திரையுடன் இறுதி புள்ளி பட்டியல் ஒன்றை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | பெறுபேற்று அட்டவணைகளில் வெளிப்படை தன்மையை உறுதிப்படுத்தும் வகையில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

### 1.5.2.3 செயற்பாட்டு வினைத்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் 2025 திசம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தி செய்யப்படாத இருந்த 42 புலனாய்வுகளை பரீட்சித்த போது ஆரம்ப புலனாய்வு கிடைத்து 06 | ஆரம்ப புலனாய்வு அறிக்கையொன்று ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் அதற்கான குற்றச்சாட்டு பத்திரங்களை் விநியோகித்தல் மற்றும் ஒழுக்காற்று கட்டளை வழங்குதல் | புலனாய்வுகளை நடத்துதல் குற்றச்சாட்டு பத்திரங்களை வெளியே வைத்தல் ஒழுக்காற்று கட்டளை வழங்குதல் தொடர்பாக |

| | | |
|---|---|---|
| மாதங்களுக்கும் 02 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலம் கடந்திருந்த போதும் புலனாய்வுகளுக்குரிய பரிசோதனை நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படாமல் காணப்பட்ட 12 சந்தர்ப்பங்கள் ஆரம்ப புலனாய்வுகள் கிடைத்து 03 மாதங்கள் கடந்த இருந்த போதும் புலனாய்விற்காக பரிசோதனை குழு நியமிக்கப்படாதிருந்த 13 சந்தர்ப்பங்கள் காணப்பட்டதுடன் 04 புலனாய்வு நடவடிக்கை களுக்குரிய பரிசோதனை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப் பட்டிருக்கவில்லை பூர்த்தி செய்யப்படாத அந்த 42 கோவைகளில் நிதி மோசடிகளுக்குரிய 24 சம்பவங்கள் மற்றும் பாடசாலைகளில் சிறுவர் துஷ்பிரயோகங்களுக்குரிய 9 சம்பவங்களுக்காக வெளிப்படுத்தப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் புலனாய்வு நடத்தப்பட்டிருந்த போதும் எதிர்காலத்தில் அவ்வாறான சம்பவங்களை தவிர்ப்பதற்கான வேலை திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு இருக்கவில்லை. | என்பவற்றிற்கிடையே விரிவான செயற்பாடு ஒன்று இடம்பெறுவதாக | நடவடிக்கைகளின் தாமதத்தை தவிர்ப்பதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும் |

## 1.5.3 செலவினத் தலைப்பு 210 - வட மேல் மாகாண பிரதான அமைச்சு மற்றும் நிதி மற்றும் திட்டமிடல், பொறியியல் சேவை சட்டம் மற்றும் சமாதானம், கல்வி, உள்ளூராட்சி மற்றும் உள்ளூராட்சி நிர்வாகம், பொருளாதார மேம்பாடு, சுற்றாடல் அலுவல்கள், நீர் வழங்கள் மற்றும் நீர் வடிகாலமைப்பு மற்றும் சுற்றுலா அலுவல்கள் தொடர்பான மாகாண அமைச்சர்

### 1.5.3.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானளுடனான இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்ளுடனான தொடர்பு மற்றும் இணங்காமை | இணங்காமை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 2006 மே 30 ஆம் திகதிய 09/2006 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை மற்றும் 2018 ஆகஸ்ட் 01 ஆம் திகதி 29/2018 ஆம் இலக்க கல்வி அமைச்சின் செயலாளரின் சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தி | அரச பாடசாலைகளில் சேவையில் ஈடுபட்டுள்ள கல்வி சாரா பதவியணியின் இரண்டாம் நிலைக்குரிய உத்தியோகத்தர்கள் நாளொன்றுக்கு 7 மணித்தியாலங்கள் 45 நிமிடங்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட வேண்டும் என வடமேல் மாகாண பிரதான செயலாளர் மற்றும் வடமேல் மாகாண பிரதான அமைச்சரின் செயலாளரின் ஆலோசனையின் பிரகாரம் வடமேல் மாகாணத்தின் பாடசாலைகளில் சேவையில் ஈடுபட்டுள்ள 2107 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் அளவில் அந்தப் பாடசாலைகளில் ஆசிரியர்கள் சேவை புரியும் கடமை நேரத்தில் அதாவது முற்பகல் 7:30 முதல் பிற்பால் 1:30 வரை 6 மணித்தியால்கள் மணித்தியாலங்கள் மாத்திரம் சேவைபுரிகின்றனர் இந்த வரப்பிரசாதம் காரணமாக பாடசாலைகளில் மிகை உத்தியோகத்தர்களை கல்வி | பாடசாலைகளில் சேவை புரிகின்ற அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் கடமை நடவடிக்கை கடமையாக அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக மாத்திரம் அல்லாமல் சில உத்தியோகத்தர்கள் ஆசிரியராகவும் அப்பாடசாலை சேவை புரிவதால் காலத்தை தீர்மானித்தல் தொடர்பாக சிக்கனான நிலைமையொன்றை எதிர்கொண்டு உள்ளதாகவும் எவ்வாறாயினும் வேறு அனைத்து தகவல்களும் கல்வி ஆராயப்பட்டு முன்மொழிவுகளை முன்வைப்பதற்கு உரிய உத்தியோகத்தர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளதாக | 2006 மே 30 ஆம் திகதிய 11/2025 ஆம் இலக்க கல்வி அமைசசு செயலளாரின் சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

| | | |
|---|---|---|
| | திணைக்களத்திற்கு அல்லது வலயக் கல்வி அலுவலகங்களுக்கு இணைப்பதற்கு முடியாமல் இருந்தது. | |

### 1.5.3.2 செயற்பாடுகளை நிறைவேற்றாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாகாணத்தின் பொதுமக்களுக்கு நீர் வழங்கள் மற்றும் சுற்றாடல் பாதுகாப்பை நோக்கமாகக் கொண்டு உருவாக்கப்படுகின்ற சமூகநல அமைப்புகளை ஒழுங்குபடுத்தும் வடமேல் மாகாண நீர் வளங்கள் மற்றும் சுற்றாடல் ஆரோக்கிய நலன் அலகின் அடிப்படை நோக்கமாக இருந்த போதும் 2019 - 2025 ஆம் ஆண்டுகளில் செயற்படுத்தப்பட்ட 79 நீர்த்திட்டங்களில் இருந்து மக்களுக்கு பகிர்ந்து அளிக்கப்படும் நீரின் இரசாயன மற்றும் மற்றும் நீர் மாதிரி பரிசோதனை ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆய்வுக்கூடங்களில் இருந்து மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அதற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | 2019 முதல் 2025 ஆம் ஆண்டு வரை செயற்படுத்தப்பட்ட மீள் சுற்று அனுப்ப நீர் சுத்திகரிப்பு முறைமைகளில் சுத்திகரிக்கப்படும் நீரின் நீரில் ரசாயன மற்றும் பரிசோதனை அறிக்கைகளின் பிரதிகள் இந்த அலகுக்கு பெற்றுக் கொள்வது இடம்பெறாததுடன் இந்நிலைமையை அடிப்படையில் அந்தப் பிரதிகளை கணக்காய்வுக்கு சமர்ப்பிப்பதற்கு முடியாதிருந்ததாக | மூக நல அமைப்புகளுக்கு வழங்கப்பட்டுள்ள வழிகாட்டலின் பிரகாரம் நீர் மாதிரி பரிசோதனை தொடர்பாக கண்காணிக்கப்பட வேண்டும். |

### 1.5.3.3 எதிர்பார்த்த விளைவு மட்டத்தை அடையாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| விசேட தேவைப்பாடுகளுடன் கூடிய கிராம அபிவிருத்தி செயற் திட்டத்தின் கீழ் 2021 ஆம் ஆண்டிலும் 2023 ஆம் ஆண்டிலும் முறையே ரூபா 8,827,020 மற்றும் 9,445,604 செலவிடப்பட்டு | கல்னகமுவ இஹல திகன நீர் செயற்திட்டம் ஆரம்பிக்கப் படும் சந்தர்ப்பத்தின் போது சமூக அமைப்பின் 295 அங்கத்தவர்கள் மாத்திரம் அங்கத்துவத்தை பெற்றுக் கொண்டிருந்த போதும் | உரிய காலப்பகுதியில் பூர்த்தி செய்த செயற்திட்டங்களில் இருந்து நலன்களை பெற்றுக் கொள்வதற்கு |

| | | |
|---|---|---|
| மேற்கொள்ளப்பட்ட கல்கமுவ ,ஹல திகன கிராமத்தில் நீர் வசதிகள் மற்றும் ஆரோக்கிய வசதிகள் அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்தின் கீழ் நீர் தாங்கி நிர்மாணம் மற்றும் நீர் குழாய்களை பதித்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருந்த போதும் 295 வீடுகள் இலக்கிடப்பட்ட நலனாளிகளின் அளவுக்கிடையே மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் 40 வீடுகளுக்கு மாத்திரம் நீர் வழங்கப்பட்ட காரணத்தினால் செயற்திட்டத்தின் செயலாற்றல் 13 சதவீதமான குறைந்த மட்டத்தில் காணப்பட்டன . | இச்செயற் திட்டத்தை பல கட்டங்களின் கீழ் முடிப்பதற்கு கூடியதாக ,ருந்ததால் செயர்த்திட்டம் பூர்த்தி செய்யப்படும் சந்தர்ப்பத்தின் போது அனேகமான நபர்கள் அச்அங்கத்துவத்திலிருந்து விலகி வேறு நீர் வசதிகளை பெற்றுக் கொண்டிருந்தனர்.எனினும் தற்போது இச்செயற் திட்டத்திலிருந்து 98 உறுப்பினர்கள் மாத்திரம் நீரை பெற்றுக் கொண்டுள்ளதாக தயவுடன் குறிப்பிடுவதுடன் மேலும் நீரை பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்த்துள்ள 10 விண்ணப்ப தாரிகள் முன்வந்துள்ளதாகவும் அந்த சமூக நலன் அமைப்பிலிருந்து தெரிந்து கொள்ளப்பட்டதாக | செயற்திட்ட செயலாற்றலை உயர் அளவில் வைத்துக்கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.3.4 செயற்திட்டங்களை பூர்த்தி செய்யாமல் கைவிடுதல்

| **கணக்காய்வு அவதானிப்பு** | **ஃபிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| 2016 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட வயம்ப ஜனகலா மன்றத்தில் அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்திற்காக கணக்காய்வு திகதியான 2026 ஜனவரி 24 ஆம் திகதி வரையில் ரூபா 210,296,578 ஆன செலவொன்று மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் அந்த நிர்மாணங்கள் மீளாய் வாண்டின் டிசம்பர் 31 ஆம் திகதி வரையில் விளைவற்று காணப்பட்டன | மாகாண திறைசேரியின் 2025 திசெம்பர் 17 ஆம் திகதிய NWP/PT/Ap/06 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் 2026 ஆம் ஆண்டிற்காக ரூபா 300 மில்லியன் அதி கூடிய நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் நிர்மாணத்திற்கான ஆரம்ப நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ளதாக | செலவினம் / நலன்கள் தொடர்பான பகுப்பாய்வு செய்து சரியான சாத்தியவள ஆய்வொன்று மேற்கொண்டு செயற் திட்டத்தை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும |

### 1.5.4 தலைப்பு 211- வடமேல் மாகாண உள்ளூராட்சி மன்ற திணைக்களம்

#### 1.5.4.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வடமேல் மாகாண உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களில் மிகை அளவீடு தொடர்பாக பராமரித்துச் செல்லப்படுகின்ற பதிவேடு மற்றும் கோவைகளின் பிரகாரம் 1994 மற்றும் 1995 ஆம் ஆண்டுகளில் வடமேல் மாகாண உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களின் நடவடிக்கைகள் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களால் வழங்கப்பட்டிருந்த 02 மிகை அறவீட்டு சான்றிதழ்கள் பெறுமதியான ரூபா 1,839,452 தொடர்பாக 2025 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு இருக்கவில்லை. | மேலும் அறவிடப்பட வேண்டிய மிகை அறவீட்டுத்தொகை ரூபா 1,839,452 தொகை காணப்பட்டதுடன் உள்ளூராட்சி மன்ற அமைச்சு ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதாக | மிகை அறவீட்டை விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.5 தலைப்பு 212 - வடமேல் மாகாண பொறியியலாளர் திணைக்களம்

#### 1.5.5.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானளுடனான இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்ளுடனான தொடர்பு | இணங்காமை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோஷலிசக் தாபன விதிக் கோவை | | | |
| (i) | VIII ஆம் அத்தியாயத்தின் 3.2 ஆம் பந்தி | மேலதிக நேரப் படிகள் திட்டவட்டமான நிர்ணயிக்கப்பட்ட போதும் | பிரதான செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டு வழமையான | தாபன விதிக்கோவை யின் பிரகாரம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பொதுவான வேலை நடவடிக்கைகள் இருந்து விலகிய அவசரமான பொதுவான கடமை நேரத்தில் செய்ய முடியாத வேலைக்காக மாத்திரமாக செலுத்தப்பட முடியுமாக இருந்ததுடன் மாகாண பொறியியல் திணைக்களம் மற்றும் வாரியபொல பொறியியல் அலுவலகத்தில் 13 தொழில்நுட்ப உத்தியோகத்தர்களால் அவர்களின் வழமையான கடமை நேரத்தில் செயற்திட்ட களப்பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட திகதிகளில் வெளிக்கள கடமைகள் மேற்கொண்ட நாட்களுக்காக உரித்தான ரூபா 375,274 ஆன இணைந்த படிகள் மற்றும் போக்குவரத்து படிகள் பெற்றுக் கொண்டிருந்ததுடன் அக்காலப்பகுதிக்காக ரூபா 347,769 ஆன மேலதிக நேரம் படிகளையும பெற்றுக் கொள்வதற்கும்நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | கடமை நேரத்திற்கு புறம்பாக மேற்கொண்ட காலப்பகுதிக்காக மேலதிக நேரக் கொடுப்பனவு நடவடிக்கைகள் செய்யப்பட்டது. மேலதிக கொடுப்பனவு தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டிய முறை 2025 திசெம்பர் 17 ஆம் திகதிய வபொப/ஆ/04/6/1 மற்றும் 2025 திசம்பர் 05 ஆம் திகதிய வபொதி/ஆ/4/1/1 ஆம் இறக்க கடிதங்கள் மூலம் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளன.வடமேல மாகாண பிரதான செயலாளரின் 2025 நவம்பர் 25 ஆம் திகதி NWP/CS/AD/15/1/1/2025 ஆம் இலக்க கடிதங்களுக்கு உரித்தான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **(ii)** | VIII ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பந்தி | வெளிக்கள உத்தியோகத்தர் ஒருவர் அதாவது பிரதானமாக வெளிக்கள வேலை நடவடிக்கைகள் கையளிக்கப்பட்டுள்ள ஒரு இடத்திற்கு மட்டுப்படுத்தபடாத ஏதேனும் அலுவலகம் ஒன்றுக்கு மட்டுப்படுத்தப் படாமல் ஏதேனும் அலுவலகத்திற்க மட்டுப்படுத்தாமல் வெளியில் அமைந்துள்ள வேலைத தளங்களுக்கு நாளாந்தம் செல்ல வேண்டிய கண்காணிப்பு தன்மையிலான கடமைகள் கையளிக்கப் பட்டுள்ள உத்தியோகத்தர் ஒருவருக்கு பதவி நிலை உத்தியோகத்தர்களுக்கு மேலதிக நேரத்தை பெற்றுக்கொள்வதற்கு உரித்து இல்லாத போதும் பிரதான செயலாளரின் 2025 | பிரதான செயலாளரின் 2025 நவம்பர் 25 ஆந் திகதிய NWP/CS/AD/15/1/2025 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் முறையான அங்கீகாரத்துடன் மேலதிக நேரப் படிகளை கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக | தாபன விதிக் கோவையின பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | நவம்பர் 11 ஆந் திகதிய NWP/CS/AD/1/1/2025 கடிதத்தின் பிரகாரம் பொறியியலாளர் அளவு பரிசோதனையாளர், கட்டிடக்கலை நிபுனர், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் மற்றும் திட்டமிடல் வல்லுநர் ஆகிய பதவிகளுக்குரிய உத்தியோகத்தர்களுக்கு மேலதிக நேர படிகள் கொடுப்பனவு செய்தற்கு அங்கீகாரம் பெற்றுக் கொண்டு பொறியியல் திணைக்களத்தின் 07 பொறியியலாளர்களுக்கு 71 தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கும் 03 திட்டமிடல் வல்லுனர்களுக்கும் மேலதிக நேரப் படிகளாக ரூபா 3,222,605 தொகை 2025 ஆம் ஆண்டின் இறுதி 03 மாதங்களுக்காக கொடுப்பணவு செய்யப்பட்டு இருந்தது. | |

**1.5.5.2 கைவிடப்பட்ட செயற்திட்டங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாரவில ஆதார வைத்தியசாலையின் சிறுவர் வாரட் தொகுதி மற்றும் அவசர சிகிச்சை பிரிவு ஐந்து மாடிகளுடன் நிர்மானிப்பதற்காக 2019 ஜனவரி 02ஆம் திகதி முதலாவது கட்டமாக CESL நிறுவனத்துடன் ரூபா 45,138,012 ஆன ஒப்பந்த பெறுமதிக்கு உடன்படிக்கை செய்யப்பட்டிருந்ததுடன் முதலாவது கட்டத்தின் கீழ் முதலாவது மாடி SLAB வரை கட்டமைப்பு நிர்மாணத்திற்காக 2020 திசெம்பர் 15 ஆம் திகதி வரை ரூபா 47,905,434 ஆன | மாறவிட ஆரம்ப வைத்தியசாலையின் 5 மாடிகளுடன் கூடிய சிறுவர் வார்ட் தொகுதி மற்றும் அவசர சிகிச்சை பிரிவு நிர்மாணத்தின் முதலாம் கட்டம் 2020 திசெம்பர் மாதம் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் அதன் பின்னர் வருடக்கணக்காக கடந்திருந்த போதும் எஞ்சிய கட்டங்களை பூர்த்தி செய்வதற்காக இதுவரை நிதி ஏற்பாடு கிடைக்கவில்லை என்பதாகவும் 5 மாடிகளுடன் கூடிய கட்டிட நிர்மாணத்தின் கட்டம் கட்டமாக நிர்மானிப்பதற்குரிய மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தில் | அத்தியவசிய நிர்மாணம் தொடர்பாக முன்னுரிமை வழங்கி நிதி ஏற்பாடுகளை ஒதுக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

| | | |
|---|---|---|
| செலவினம் ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதன் பின்னர் 2020 ஆம் ஆண்டு முதல் 2025 செப்டம்பர் வரையிலும் எவ்வித நிர்மாண நடவடிக்கைகளுக்காக 05 ஆண்டுகளில் சுகாதார அமைச்சின் ஊடாக எவ்வித நிதி ஏற்பாடும் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. ஐந்து ஆண்டுகளுக்கும் மேற்பட்ட காலப் பகுதியில் கட்டிடத்தின் எஞ்சிய பகுதியில் வேலைகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்காமல் கட்டிடத்தின் கம்பி உருக்குலைந்து சென்றிருந்ததுடன் தற்போது நிர்மாணிக்கப்பட்டுள்ள கட்டமைப்பு பகுதியும் சிதைவடைந்து காணப்பட்டது அதன் காரணமாக முதலாம் கட்டத்தில் செலவிடப்பட்ட ரூபா 47,905,434 தொகை விளைவற்ற செலவினம் ஒன்றாக மாறியிருந்தமை புறக்கணிக்க முடியாமல் இருந்ததுடன் மீண்டும் நிர்மாணம் ஆரம்பிக்கும் போது பாரிய கிரயம் ஒன்றை செலவிடுவதற்கு நேர்ந்து உள்ளது. | வேண்டுகோளின் பிரகாரம் மதிப்பீடு தயாரிக்கப்பட்ட போதும் எஞ்சிய நிர்மாணங்கள் இதுவரை ஆரம்பிக்கப்படவில்லை என்பதாக அறியத் தருகிறேன் இதன் இரண்டாம் கட்ட நிர்மாணத்திற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு 2021 பெப்ரவரி 23 மற்றும் ஜூன் 28 ஆம் திகதிய கடிதங்கள் மூலம் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது அவ்வாறே கட்டிடத்தில் கம்பி உருக்குலைந்து இருப்பதால் கம்பி துருப்பிடிப்பதனை பாதுகாப்பதற்குரிய நடவடிக்கை எடுப்பதற்காக ரூபா 358,000 ஆன மதிப்பீடு தயாரித்து அதுவும் அனுப்பி வைக்கப்பட்டுள்ள போதும் அதற்காக நிதி ஏற்பாடு கிடைக்கவில்லை என்பதாக | |

### 1.5.5.3 பெறுகை நடவடிக்கைகள்

| **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| பன்னல தேசிய பாடசாலையில் ரூபா 5,949,440 ஆன ஒப்பந்த பெறுமதியுடன் கூடிய 2024 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட 2025 ஆம் ஆண்டில் மார்ச் மாதத்தில் திருத்தம் செய்யப்பட்ட 100 x 20 வகுப்பறை கட்டிடத்தில் பின்பகுதியில் U வடிவில் வடிகாண் உரிய செப்பனின்றி | வடிகால் வெட்டுவதற்காக செலவிடப்பட்ட மொத்த தொகை ரூபா 739,710 ஆகும் அரசின் பணத்தை பயன்படுத்தி தயாரிக்கப்பட்டிருந்த அளவில் முறையாக பராமரித்தல் மற்றும் பாதுகாப்பு உரிய நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டும் மழை நீர் வழிந்து ஓடுவதற்கு தயாரிக்கப்பட்டிருந்த வடிகாண் | நிர்மாணங்கள் உரிய முறையில் நீடித்திருக்கக்கூடிய வகையிலும் மேற்கொள்வதை முறையாக கண்காணிப்பு செய்யப்பட வேண்டும் |

| | | |
|---|---|---|
| முடிவுறுத்தாமல் அமைக்கப்பட்டிருந்ததுடன் மாணவர்களின் பாதுகாப்பு தொடர்பாக கவனம் செலுத்தாமல் நிர்மாணிக்கப்பட்டிருந்தமை மற்றும் வகுப்பறைக்காக நுழைவதற்கு தயாரிக்கப்பட்ட Concrete Slab குறுகிய காலத்தில் உடைந்திரந்தமை போன்ற குறைபாடு பௌதீக ரீதியாக பரீட்சித்த போது அவதானிக்கப்பட்டதுடன் செலவிடப்பட்ட தொகையில் உரிய பயனை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கான் மிகவும் நல்ல முறையில் தயாரிக்கப் பட்டிருந்ததாக பிரதேச பொறியிய லாளர்களால் அறிவிக்கப்பட்டு இருந்தது வெடித்து உடைந்துள்ளதாகவும் அவற்றை மீண்டும் சிமெண்ட் சிமெண்ட் இட்டு அந்த இடங்களை பராமரிக்கும் காலத்தில் பூர்த்தி செய்வதற்கு ஒப்பந்தக்காரர் அறிவித்திருந்தார். ஒப்பந்ததாரரதால் குறைபாடுகள் திருத்தப்படாமல் இருந்தால் நிறுத்தி வைத்தல் தொகையில் மாற்று வழி ஒன்று மூலம் சீரமைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக | |

### 1.5.5.4 முகாமைத்துவ செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வென்னப்புவ பிரதேச பொறியியலாளர் அலுவலகம் 1990 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை குத்தகை வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்ட கட்டிடங்களில் பேணி செல்லப்பட்டதுடன் 2021 ஆம் ஆண்டு முதல் 2025 ஆம் ஆண்டு வரை வாடகையாக ரூபா 5,712,000 வெளி தரப்பினருக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. 2009 ஆம் ஆண்டின் போது பிரதேச செயலகத்திலிருந்து பிரதேச பொறியாளர் அலுவலகத்திற்கு காணித் துண்டொன்று வழங்கப்பட்டிருந்த போதும் அலுவலக கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்காததன் பேரில் அக்காணியும் 16 ஆண்டு காலமாக விளைவற்று காணப்பட்டது. | கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்காக காணியொன்று திணைக்களத்திடம் காணப்படுவதால் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கு உரிய நிதியை ஏற்பாடு வழங்குமாறு பல தடவை கோரிக்கை விடப்பட்டிருந்த போதும் இதுவரை அதற்கான நிதி ஏற்பாடு கிடைக்கவில்லை கட்டிடத்தில் நிர்வாணத்திற்காக ஒதுக்கப்பட்ட தினை நிதி ஏற்பாட்டு கூறுகள் திணைக்களத்துக்கு இல்லாமல் இருந்ததுடன் வருடாந்த நிர்மாணிப்பிற்காக வெளியே ஏற்பாடு கூறப்பட்ட போதும் திட்டவட்டமான மானியங்களில் ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடு மாத்திரம் கிடைக்கின்றது வெண்ணைப்புவ பி.பொ.அ நிர்மாணத்திற்காக நிதி ஏற்பாட்டை பெற்றுக் கொள்வதற்கு 2026 ஆம் நிதி மதிப்பீட்டில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக | வழங்கப்பட்டுள்ள காணித் துண்டை செயற்திறனாக பயன்படுத்தி அலுவலக வளவில் நிர்மாணிப்பதற்கு நிதி ஏற்பாடுகளை ஒதுக்கீடு செய்து கொள்ள வேண்டும் |

### 1.5.6 தலைப்பு 213 - வடமேல் மாகாண கல்வித் திணைக்களம்

### 1.5.6.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானஞடனான இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்ஞடனான தொடர்பு | இணங்காமை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோஷலிசக் தாபன விதிக் கோவை | | | |
| (i) XV அத்தியாயத்தின் 9 ஆம் பிரிவு | சம்பளம் அற்ற விடுமுறை அடிப்படையில் உத்தியோகத்தர்களின் வெளிநாடு செல்லும் உடன்படிக்கை காலம் முடிவுற்ற போதும் மீண்டும் சேவைக்கு அறிக்கையிடாமல் இருந்தால் உடன்படிக்கை பிரகாரம் அறவிடப்பட வேண்டிய பணம் இலங்கையில் செல்லுபடியான நாணயத்தில் அரசாங்கத்திற்கு செலுத்த வேண்டிய போதிலும் கிரியுள்ள மற்றும் மஹவ வலய கல்வி அலுவலகங் களுக்கு இணைக்கப்பட்டிருந்து சேவை புரிந்த இலங்கை ஆசிரியர் சேவையின் 07 உத்தியோகத்தர்கள் வெளிநாட்டு விடுமுறைகள் பூர்த்தி செய்யப்பட்டு மீண்டும் சேவைக்கு அறிக்கையிட்டு இருக்கவில்லை.<br>உடன்படிக்கையின் (2) (iv) ஆம் பிரிவின் பிரகாரம் அந்த உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 6,161,174 தொகை மீளாய்வாண்டு இறுதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | கிரியுள்ள வலயத்தின் 05 ஆசிரியர் களுக்காக மற்றும் மஹவ கல்வி நிலையத்தின் இரண்டு ஆசிரியர்களுக்கு சேவை விட்டுச் செல்லும் மற்றும் தண்டப்பணம் தொகையை அறவிடுவதற்கும் அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளன. மஹவ வலயத்தின் டபிள்யூ.ஏஎ சுமித்ரா லியனகே தனது சேவையை தாபிப்பதற்காக அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்கு வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளதாக. | தாபன விதிக் கோவையின் பிரகாரம் குறித்த பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | 2019 பெப்ரவரி 25 ஆந் திகதிய 05/2019 ஆம் இலக்க கல்வி அமைச்சு செயலாளரின் சுற்றிக்கை | ஐந்தாம் தர புலமைப்பரிசில் கொடுப்பனவு நிகழ்நிலை வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில், பாடசாலையால் பூர்த்தி செய்யப்பட்ட மாணவர் தகவல் அமைப்பின் துல்லியத்தன்மையை உறுதிப்படுத்தி, கொடுப்பனவு நடவடிக்கைகளுக்காக வங்கி கிளைகளுக்கு ஒவ்வொரு மாதமும் 29 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்புவது வலயக் கல்வி அலுவலகத்தின் பணியாகவிருந்த போதிலும், புலமைப்பரிசில் பெறுநர்களின் தகவல்கள் சரியாக இல்லாமை காரணமாக 6 வலயக் கல்வி அலுவலகங்களில் 2023 ஏப்ரல் மாதம் முதல் 2025 ஜூன் மாதம் வரை செலுத்தப்பட வேண்டிய ரூபா. 2,427,250 புலமைப்பரிசில் பொது வைப்புக் கணக்கில் தடுத்து வைக்கப்பட்டிருந்ததுடன், 2021 செப்டம்பர் மாதம் முதல் 2023 செப்டம்பர் மாதம் வரை ரூபா. 1,876,503 தொகை அரச வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. | இந்த பணத்தை மாணவ உதவி பெறும் மாணவர்களின் கணக்குகளுக்கு செலவு வைப்பபதில் தாமதத்தை குறைப்பதற்கு வலய மட்டத்தில் நடவடிக்கை எடுப்பதாகவும் அனைத்து பாடசாலைகளிலும் மாணவர்களுக்கு செலவு வைக்கப்படாத மாணவர்களின் தரவுகளை மக்கள் வங்கியின் முகாமையாளருக்கு சமர்ப்பித்து தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அனைத்து வலய கல்வி பணிப்பாளர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது | முடியுமான வரை முயற்சித்து நலன்களை மாணவர்களுக்கு உரிய வகையில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.6.2 நட்டங்களும் சேதங்களும்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வெண்ணபுவ புனித மகளிர் மத்திய வித்யாலயத்தின் 2024 ஆம் ஆண்டில் பாடசாலை அபிவிருத்தி திட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டிருந்த இசை நிகழ்ச்சி கொண்டாட்ட ஞாபகார்த்த வலயத்திற்கு அந்தந்த வகுப்பு மட்டத்தில் ரூபா 5,023,050 தொகையும் அனுசரணையாளர்களிடமிருந்து ரூபா 1,355,000 பங்களிப்பு மற்றும் நன்கொடைகளாக கிடைத்திருந்த போதும் | பாடசாலையில் மேற்கொள்ளப்படுகின்ற எந்த ஒரு செயற்திட்டமும் 54/2023 சுற்றறிக்கைக்கு இணங்கி மேற்கொள்ளப்பட வேண்டும் என அதிபருக்கு கவனம் செலுத்துமாறு தெரிவிக்கப்பட்டுள்ளதாக | வருமானங்கள் பாடசாலையில் அபிவிருத்தி சங்க கணக்கிற்கு செலவு வைத்து செலவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| அப்பணத்தை பாடசாலை அபிவிருத்தி கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருக்க வில்லை | | |

### 1.5.6.3 முகாமைத்துவ பலவீனங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மாகாண கல்வி திணைக்களத்திற்குரிய 8 வலயங்களுக்குரிய 1204 பாடசாலைகளில் 1043 பாடசாலைகளின் வளவின் காணியின் உரித்தினை கையேற்பதற்கு 2025 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | உரித்தினைக் கையேற்றுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை 161 என்பதாக | காணிகளின் அளவீட்டு நடவடிக்கைகள் மேற்கொண்டு கையளிப்பு கட்டளைகள் வழங்குவது பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | வடமேல் மாகாணத்தின் தகவல் மற்றும் தொலைக்கல்வி கேந்திர நிலையத்தின் 09 இடங்களில் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நடைமுறை கணக்குகளில் ரூபா 6,568,279 ஆன மீதிகளும் 04 நிலையங்களுக்குரிய ரூபா 2,917,083 ஆன நிலையான வைப்பு மீதிகளும் காணப்பட்டன எனினும் அந்த நிலையான வைப்பதற்குரிய வட்டி வருமானம் நடைமுறை கணக்குகளுக்கு செலவு வைக்கப்பட்டதற்கான சான்றுகள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை | இந்த வட்டி வருமானம் அந்நிலையங்களுக்குரிய தேவைப்பாட்டின் பேரிலும் குழு தீர்மானத்தின் பேரிலும் செயற்படுத்தப்படுவதாக | சுற்றறிக்கை பிரகாரம் பயன்படுத்துவதற்கும் மிகவும் சாதகமான வட்டி விகிதம் ஒன்றின் கீழ் முதலீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.6.4 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வடமேல் மாகாண சபையின் செயற்பாட்டு விதிக் கோவையின் XVIII- ஆம் அத்தியாயத்தின் 192 பிரிவின் படி, வடமேல் மாகாண சபையின் பொதுச் சேவையின் ஒவ்வொரு அதிகாரியும் மற்றும் வடமேல் மாகாண சபையில் உள்வாங்கப்பட்ட ஒவ்வொரு அதிகாரியும் | இலங்கை கல்வி நிர்வாக சேவையின் ஆண்டு இடமாற்றங்களை நடைமுறைப்படுத்தும் அதிகாரம் பெற்ற வடமேல் பிரதான செயலாளர், இடமாற்றங்களை | சுற்றறிக்கையின் விதிகளுக்கு இணங்க வருடாந்த இடமாற்றங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.. |

| | | |
|---|---|---|
| இடமாற்றங்களுக்கு உட்பட்டிருந்த போதிலும், வடமேல் மாகாண சபையுடன் இணைக்கப்பட்ட கல்வி நிர்வாக சேவையின் அதிகாரிகளைப் தொடர்பாக அதற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை. மாகாண கல்வித் திணைக்களத்தினால் கணக்காய்விற்குக்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவலின் படி, 06 வலய கல்வி அலுவலகங்களுடன் இணைக்கப்பட்ட 35 அதிகாரிகளுக்கு 06 முதல் 18 ஆண்டுகள் வரையிலான காலத்திற்கு ஒரே சேவை நிலையத்தில் பணியாற்றுவதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டிருந்தது. மேலும், 195 பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள வருடாந்த இடமாற்றங்கள் செயல்படுத்தப்படாமையால், மற்றும் 194 ஆம் பிரிவிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட iii, vi, vii, viii ஆம் நோக்கங்கள் ஆகியவை அடையப்படவில்லை. | நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக | |

.

### 1.5.7 தலைப்பு - 221 வடமேல் மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம்

#### 1.5.7.1 முகாமைத்துவ பலவீனங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வியாபார வர்த்தக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சின் மூலம் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான ஆலை உரிமையாளர்களுக்கான கடன் வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2023 நவம்பர் 01 ஆம் திகதி முதல் 2024 மார்ச் 24 ஆம் திகதி கால எல்லைக்குள் புத்தளம் மாவட்டத்தின் அரிசி உற்பத்தியாளர்களின் கூட்டுறவு சங்கத்திற்கு 04 கட்டங்களின் கீழ் ரூபா 82 மில்லியன் மற்றும் குருநாகல் மாவட்டத்தின் அரிசி உற்பத்தியாளர்களின் கூட்டுறவு சங்கத்திற்கு 06 கட்டங்களின் கீழ் ரூபா 69 மில்லியனும் வழங்கப்பட்டிருந்ததுடன் 2026 மார்ச் 05 ஆம் திகதி வரை புத்தளம் மற்றும் குருநாகல் மாவட்டங்களின் 2 சங்கங்களில் நிலுவையாக காணப்பட்ட தொகை முறையே ரூபா 71.53 மில்லியன் மற்றும் ரூபா 69 மில்லியன் ஆக மொத்தம் ரூபா 140.53 மில்லியன் ஆக இருந்தது. அதற்கு மேலதிகமாக கடன் கொடுப்பனவு | வரையறுக்கப்பட்ட குருநாகல் மாவட்ட அரிசி உற்பத்தியாளர்களின் கூட்டுறவு சங்கத்திற்கு வழங்கப்பட்ட ரூபா 69 மில்லியனுக்குரிய 2025 டிசம்பர் தவணையான ரூபா 1,150,000 ஆன தொகை சங்கத்திற்கு அறவிடப்பட்டுள்ளது அவ்வாறே வரையறுக்கப்பட்ட புத்தளம் மாவட்ட அரிசி உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கத்திற்கு வழங்கப்பட்ட ரூபா 82 மில்லியனுக்காக இணங்கப்பட்ட பிரகாரம் 2025 டிசம்பர் மற்றும் 2026 ஜனவரி பெப்ரவரி தவணை ரூபா 3,700,002 தொகை கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் நடைமுறை கணக்கில் வைப்பு செய்யப்பட்டிருந்ததுடன் பொது வைப்புக் கணக்கில் இதுவரை உணவு ஆணையாளரின் | உடன்படிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

| | | |
|---|---|---|
| தாமதத்திற்கான தாமதக் கட்டணங்களாக குருநாகல் மற்றும் புத்தளம் கூட்டுறவு சங்கங்கள் முறையே ரூபா 16.33 மில்லியன் மற்றும் ரூபா 4.47 மில்லியன் என மொத்தம் ரூபா 20.8 மில்லியன் தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க எடுத்திருக்கவில்லை. | அறிவுறுத்தல் கிடைக்கும் வரை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. மாவட்ட அரிசி உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்தினால் ஜனவரி மாதத்திற்குரிய தவணை 2026 பெப்ரவரி 15 ஆம் திகதி வரையிலும் தீர்வு செய்யப்படாததால் சங்கத்தின் கௌரவ பணிப்பாளர் சபை கூட்டத்திற்கு சென்று பொறுப்பான உத்தியோகத்தரால் தேவையான அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. அதற்கு மேலதிகமாக இரண்டு சங்கங்களின் அங்கத்தவர்களுக்கும் பணத்தை கொடுப்பணவு செய்வதற்காக விரைவில் நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக | |

### 1.5.7.2 சர்ச்சைக்குரிய தன்மையிலான விடயங்கள்

| **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| கூட்டுறவு சங்கங்களில் காணப்படும் சிக்கல்களை தீர்வு செய்தல், தீர்ப்பாளர் தீர்வுகள், நீதிமன்ற அமுலாக்கம், கிடைக்கும் நீதிமன்ற தண்டபணத் தொகை என்பவற்றை உரிய சங்கங்களுக்கு செலுத்தி செலுத்தி முடித்தல் போன்ற விடயங்கள கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்துக்குரிய செயற்பாடாகும் இவ்வாறான செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் உள்ளக சுற்றறிக்கை 02/2001 மற்றும் 12/2019 மூலம் திணைக்களத்தின் உற்றியோகத்தர்களுக்கு 2022 முதல் 2025 ஜுலை வரை ரூபா 19,528,056 தொகை | நீதிமன்ற அமுலாக்கத்தின் பின்னர் திறந்த நீதிமன்றத்தில் தோன்றுதல் மற்றும் அங்கு தீர்ப்பாளர் தீர்மானங்களுக்கு உரிய தகவல்களை சேகரித்தல் மற்றும் நீதிமன்ற தண்டபணத் தொகை தொகை திணைக்களத்திற்கு கிடைத்த பின்னர் சங்கங்களுக்கு பணத்தை விடுவிக்கும் நடவடிக்கைகள் போன்ற அனைத்து நடவடிக்கைகளும் நீதிமன்ற உத்தியோத்தராலே மேற்கொள்ளப்படுவதால் 2001 ஆம் ஆண்டு முதல் சுற்றறிக்கை விநியோகிக்கப்பட்டன் பின்னர் ஊக்குவிப்பு படிகள் கொடுப்பனவு செய்யப்படுகின்றன. 2001 பெப்ரவரி 15 ஆம் திகதிய 02/2001 ஆம் இலக்க மற்றும் 2019 ஆகஸ்ட் 7 ஆம் திகதிய | ஊக்குவிப்பு படிகள் கொடுப்பனவு செய்வதற்கு மாகாண சபையின் முறையான அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும் |

| | |
|---|---|
| ஊக்கு படிகளாக பகிர்ந்து அளிக்கப்பட்டிருந்தது இதற்காக சட்டரீதியான ஏற்பாடு ஒன்று அல்லது மாகாண சபையின் முறையான அங்கீகாரம் ஒன்று இருக்கவில்லை | 12/2019 ஆம் இலக்க உள்ளக சுற்றறிக்கையின் பிரகாரம் இந்த ஊக்குவிப்பு படி கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளது உள்ளக சுற்றறிக்கை தொடர்பாக மாகாண ஆளுநரின் மற்றும் மாகாண பிரதான செயலாளரின் முறையான அங்கீகாரம் ஒன்றை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாக. |

**1.5.8 தலைப்பு -230 வடமேல் மாகாண சுகாதார சுதேச மருத்துவ, சமூக நலன்புரி நன்நடத்தை, சிறுவர் பாதுகாப்பு சேவைகள் மகளிர் விவகார அலுவல்கள் மற்றும் சபை அலுவல்கள் தொடர்பான மாகாண அமைச்சர்**

**1.5.8.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானளுடனான இணங்காமை.**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்ளுடனான தொடர்பு | இணங்காமை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் தாபன விதிக் கோவையின் II ஆம் தொகுதியின் XLVII ஆம் அத்தியாயத்தின் 13.2 பிரிவு | ஒவ்வொரு ஆரம்பப் புலனாய்வு தாமதமின்றி முடிவுறுத்துவதற்கு அவதானம் செலுத்த வேண்டிய போதிலும் ஆரம்ப புலனாய்விற்காக அதிகாரம் கையளிக்கப்பட்டு 2026 ஏப்ரல் 30 இல் உள்ளவாறு 03 ஆண்டுகளும் 06 மாதங்கள் முதல் 01 ஆண்டும் 3 மாதங்கள் வரையான காலம் ஆரம்பப் புலனாய்வு அறிக்கையை வழங்குவதற்காக எடுக்கப்பட்டிருந்த 12 புலனாய்வுகள் காணப்பட்டன. | ஆரம்ப புலனாய்வு குழுவின் வேலைப்பழு அதிகமாக இருந்த காரணத்தினால் இந்த ஆரம்ப புலனாய்வுகளை பூர்த்தி செய்வதில் தாமதம் ஏற்பட்டுள்ளது அந்த நடவடிக்கைகளை விரைவில் பூர்த்தி செய்யுமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக | தாபன விதிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.9 தலைப்பு 231 - வடமேல் மாகாண சுகாதாரா சேவைகள் திணைக்களம்

#### 1.5.9.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானளுடனான இனங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்ளுடனான தொடர்பு | இணங்காமை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | வடமேல் மாகாண செயற்பாட்டு வழிகாட்டி கோவையின் I ஆம் தொகுதி XV ஆம் அத்தியாயத்தின் 214 ஆவது பிரிவின் பிரகாரம் மற்றும் 173 ஆம் பிரிவு | பதவி ஒன்றை விட்டு செல்கின்ற உத்தியோகத்தர்களாக கருதிய 12 பேருக்கு கூடுதலாக செலுத்தப்பட்ட ரூபா 545,855 தொகையொன்று மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. பதவி விட்டுச் சென்றதாக கருதப்பட்ட மேலும் 14 உத்தியோகத்தர்களுக்கு கூடுதலாக செலுத்தப்பட்ட தொகை தொடர்பாக கணக்காய்வுக்கு உறுதிப்படுத்த சான்றுகள் சமர்ப்பிக்கப்படவில்லை. | கணக்காய்வு விசாரணைக்காக பதில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரிடமிருந்து கிடைக்காமையால் அதற்கான பதில் விரைவில் பெற்றுக் கொண்டு உங்களுக்கு வழங்குவதாக | பதவியை விட்டுச் சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து கூடுதலாக செலுத்தப்பட்ட பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | வடமேல் மாகாண நிதி விதி கோவையின் 466 மற்றும் 477 ஆம் விதிகள் | குருநாகல் பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்குரிய 173 நிறுவனங்களுக்கு இடையே 62 இலும் புத்தளம் பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்குரிய 64 அலுவலகங்களில் 41 இல் 2025 ஆம் ஆண்டில் பொருட் கணிப்பீடு நடவடிக்கைகள் 2026 ஜுன் 30 ஆம் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில் | பதில் அளிக்கப்பட்டு இருக்கவில்லை. | மாகாண நிதி விதிகள் பிரகாரம் பொருள் கணிப்பீட்டை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

லை. அத்துடன் புத்தளம் பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்குரிய 05 நிறுவனங்களில் 2024 ஆம் ஆண்டு பொருட் கணிப்பீட்டு நடவடிக்கைகளும் பூர்த்தி செய்யப்பட்டு இருக்கவில்லை.

### 1.5.9.2 எதிர்பார்த்த நலன்களை அடையாமை

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சிற்றுண்டிச்சாலை நிதியத்திற்காக 2024 ஆம் ஆண்டில் 15 வைத்தியசா லைகளில் இருந்தும் 2025 ஆம் ஆண்டில் 21 வைத்தியசாலை களிலிருந்தும் முறையே ரூபா 9,003,357 மற்றும் ரூபா 28,417,499 தொகை கிடைத்திருந்த போதும் சிற்றுண்டிச்சாலை நிதியத்தில் இருந்து வைத்தியசாலை நடவடிக்கை களுக்கான செலவினத் திற்காக 2024 ஆம் ஆண்டில் 06 வைத்தியசாலைகளுக்கும் 2025 ஆம் ஆண்டில் 06 வைத்தியசாலைகளுக்கும் முறையே ரூபா 10,865,826 மற்றும் ரூபா 11,489,936 மாத்திரம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. சிற்றுண்டிசாலை நிதியத்தில் 2025 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 54,214,745 ஆன மீதி ஒன்று வைத்தியசாலை நடவடிக்கைகளுக்காக செலவிடப்பட்டு இருந்தது. | பதிலளிக்கப்பட்டு இருக்கவில்லை | சிற்றுண்டிசாலை நிதியத்தின் பணம் வைத்தியசாலை நடவடிக்கைகளுக்காக செலவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் . |

| | | |
|---|---|---|
| (அ) | வீதி அனுமதிப்பத்திரங்களை வழங்குதல், திருத்தம் செய்தல் மற்றும் உரிமையை முறைப்படுத்துவது தொடர்பான ஒழுங்கு விதிகளைத் தயாரித்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராத நிலையில், 2025 ஆம் ஆண்டில் ரூபா 32,462,195 பெறுமதியிலான 24 புதிய அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளதுடன், ரூபா 1,045,000 பெறுமதியிலான 24 போக்குவரத்துப் பாதை திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், ரூபா 36,700,000 பெறுமதியிலான 81 வீதி அனுமதிப்பத்திரங்களின் உரிமையை முறைப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | வடமேல் மாகாண சபையின் 2018 இன் 07 ஆம் இலக்க வீதி பயணிகள் போக்குவரத்துப் பிரமாணத்தின் 11 ஆம் பகுதியின் 18 ஆம் இலக்கத்தின் கீழ் மாகாண வீதி பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் அதிகாரங்கள் மற்றும் பணிகளின் கீழ் வீதி அனுமதிப்பத்திரங்களை வழங்குதல், திருத்தம் செய்தல், உரிமையை முறைப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. தற்பொழுது அத்தகைய பணிகளுக்காக V ஆம் பகுதியின் 40 (02) (ஆ) ஆம் இலக்கத்தின் கீழ் ஒழுங்கு விதிகளைச் சட்டப் பிரிவுக்கு அனுப்பிவைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | பிரமாணத்தின் வாசகங்கள் தொடர்பில் விரைவாக விதிகளைத் தயாரித்துக்கொள்வதற்கு நடவடிக்கை மேுறகொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | தாபன விதிக்கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 13.3 ஆம் பந்தியின் பிரகாரம் பதில் நியமனமொன்று வழங்கப்பட வேண்டியது நிரந்தர நியமனமொன்று வழங்கப்படுவது வரை தற்காலிகத் தீர்வாக மட்டுமே என்பதுடன், அப்பதவிக்குப் முழு நேர அலுவலரொருவரின் சேவை அவசியப்படுமாயின் நிரந்தர நியமனம் தாமதமின்றிச் | இப்பதவிகளுக்காக பணிக்கமர்த்துவதற்கான நேர்காணல் சபையின் பரீட்சையொன்று இடம்பெற்றதுடன், அதன்போது பிரதிப் பொது முகாமையாளர், போக்குவரத்து முகாமைத்துவ உதவியாளர் மற்றும் போக்குவரத்து முகாமையாளர் ஆகியோரை பணிக்கமர்த்துவது தொடர்பான பெறுபேறுகள் குறித்து கௌரவ ஆளுநரின் | தாபன விதிக்கோவையின் வாசகங்களுக்கு இணங்கச் செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்பட வேண்டும் என்பது மாத்திரமன்றி, நிரந்தர அலுவலரொருவர் அவசியமில்லையாயின் நிறுவனத்தின் ஏனைய அலுவலர்களிடையே கடமைப்பகிர்வு செய்யப்பட வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அதிகாரசபையின் முகாமைத்துவப் பணிப்பாளர் பதவியிற்கு 10 ஆண்டுகளாக நிரந்தர அடிப்படையில் தகுதியான நபரொருவரை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | முறைப்பாடொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளமையினால், ஆளுநரின் பதில்கள் கிடைக்கும் வரை மீள் நியமனங்களை மேற்கொள்ள முடியாது என அறிவிப்பதுடன், கணக்கீட்டு அலுவலர் பதவியைத் தேவையற்ற தகைமைகளைப் பூர்த்தி செய்திருந்த அலுவலர் கணக்கீட்டு அலுவலர் பதவியின் பதில் கடமைகளுக்காக நியமிக்கப்பட்டுள்ளது. | |
| (இ) | 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 2 (i) ஆம் பிரிவின் பிரகாரம் வரிக்குட்பட்ட வருமானத்தைக் கொண்டுள்ள ஒவ்வொரு நபரும் அச்சட்டத்தின் முதலாவது அட்டவணையின் தொடர்புடைய வரி வீதங்களின் கீழ் வருமான வரி செலுத்த வேண்டும் என்றபோதிலும், அதிகாரசபையினால் மீளாய்வாண்டில் ரூபா 16,624,216 இலாபம் ஈட்டப்பட்டிருந்த போதிலும், அச்சட்டத்தின் இரண்டாவது பகுதியின் பிரகாரம் வரி விதிக்கத்தக்க இலாபத்தைக் கணக்கிட்டு வருமான வரி செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஆண்டின் போது ஈட்டப்படும் இலாபத்திலிருந்து வருமான வரி செலுத்துவது தற்பொழுது இலங்கைக்குள் அந்தந்த மாகாணங்களில் தாபிக்கப்பட்டுள்ள போக்குவரத்து அதிகாரசபைகளினால் மேற்கொள்ளப்படுவதுடன், இந்த வருமான வரி செலுத்துவது தொடர்பாக அத்தைகைய மாகாணப் போக்குவரத்து அதிகாரசபைகளிடமிருந்து தகவல்கள் பெற்றுக்கொள்ளப்பட்டதுடன், அதன்போது அனைத்துப் போக்குவரத்து அதிகாரசபைகளும் வருடாந்த இலாபத்திலிருந்து வருமான வரி செலுத்துவதில்லை என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. | உள்நாட்டு இறைவரிச் சட்டத்திற்கு இணங்கச் செயற்பட வேண்டும் என்பதுடன் வருமான வரியிலிருந்து விடுவிக்கப்படுவதாயின் அது தொடர்பாக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திடமிருந்து உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| **(ஈ)** | வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் 2025 திசெம்பர் 31 ஆம் தேதியன்று 3 வங்கிக் கணக்குகளில் ரூபா 25,196,105 மீதியொன்று காணப்பட்டதுடன், 2025 ஆம் ஆண்டுக்கான செயற்பாட்டுத் திட்டத்திற்கமைய மாதாந்த நிறுவனச் செயற்பாட்டு மூலதனத் தேவையை அடையாளங்காட்டி மேலதிகப் | இலக்கம் 02/2016 இன் பிரகாரம் நிலுவைச் சம்பளம் செலுத்துவதற்காக ரூபா 16.5 மில்லியன் அளவிலான தொகை செலவாவதனால் மக்கள் வங்கியின் மற்றும் இலங்கை வங்கியின் நடைமுறைக் கணக்குகளில் மாதாந்தம் மிகை மீதியொன்று பேணிப்பராமரிக்கப்பட்டதாகவும், அத்தகைய நிலுவைச சம்பளம் | நடைமுறைக் கணக்குகளில் அவசியமான அளவுக்கு மட்டும் பணத்தை வைத்துக்கொண்டு ஏனைய பணத்தினைத் திறம்பட முதலீடு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| பண முதலீடு செய்து பணத்திற்கான நிலவும் வாய்ப்புச் செலவை முகாமைப்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இக்காரணத்தினால் மக்கள் வங்கியின் 02 கணக்குகளில் ஆண்டு முழுவதும் குறைந்தபட்ச மாதாந்த மீதியானது முறையே ரூபா 12,000,000 மற்றும் ரூபா 100,000 இற்குக் கூடுதலாகக் காணப்பட்டதுடன், இலங்கை வங்கியின் கணக்கொன்றில் ஆண்டு முழுவதும் குறைந்தபட்ச மாதாந்த மீதியானது ரூபா 100,000 இற்குக் கூடுதலாகக் காணப்பட்டது. 2025 ஆம் ஆண்டில் அரசின் வர்த்தக வங்கிகளின் பிரகடனப்படுத்தப்பட்ட மாதாந்த நிலையான வைப்பு வட்டியான 5.75 சதவீதத்தினைக் கருத்திற்கொள்ளும்போது அதிகாரசபையின் கணக்குகளில் ஆண்டு முழுவதும் தொடர்ச்சியாகக் காணப்பட்ட மாதாந்தக் குறைந்தபட்ச மீடியினை நிலையான வைப்பாக முதலீடு செய்யாமல் நடைமுறைக் கணக்குகளில் பேணிவந்தமையினால் அண்ணளவாக ரூபா 4,896,060 வட்டி வருமானத்தைப் பெற்றுக்கொள்வதற்கு இருந்த வாய்ப்பு இழக்கப்பட்டிருந்தது. | செலுத்தும் செயற்பாடுகள் நிறைவடைந்துவிட்டமையினால் தற்பொழுது வருமானச் செலவீனங்களைச் சமப்படுத்திக் கொண்டு மிகை வருமானத்தை நிலையான வைப்பு முதலீட்டிற்காக முகாமைத்துவப் சபைக்குச் சமர்ப்பித்து அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | |

**1.5.22.2 செயற்பாட்டுத் செயற்திறனின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2013 ஆம் ஆண்டு முதல் 2025 திசெம்பர் 31 வரை உள்ள காலப்பகுதிக்குரியதாக அதிகாரசபைக்குக் கிடைக்க வேண்டிய மாதாந்த ஓட்ட அட்டவணைப் பத்திரக் கட்டணம் | நிலுவை மீதியைத் தள்ளுபடி செய்வதற்காக 2025 ஜுலை 25 ஆம் திகதிய முகாமைத்துவப் சபைத் தீர்மானத்திற்கு இணங்க கௌரவ ஆளுநரின் ஒப்புதலுக்குச் சமர்ப்பிப்பதற்கான மேலதிக நடவடிக்கைகள் | நிலுவை வருமானங்களை அறவிட்டுக்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 12,350,000 மற்றும் தாமதக் கட்டணம் ரூபா 2,446,950 என்பன மீளாய்வாண்டு நிறைவடையும் போது அறவிட்டுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மேற்கொள்ளப்பட்டு வருவதாக. மாகாணங்களுக்கு இடையேயான பேருந்துகள் தொடர்பான நிலுவையான மாதாந்த ஓட்ட அட்டவணைப் பத்திரக் கட்டணம் தொடர்பாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் 2026 ஜனவரி 13 திகதிய NTC/OP/PA/18/156 இலக்கக் கடிதத்தின் மூலம் நிலுவை அறவீடு சம்பந்தமாக முகாமைத்துவப் சபைக்குச் சமர்ப்பித்துத் தீர்மானம் வழங்கப்படவுள்ளது | |
| (ஆ) | 2013 ஆம் ஆண்டு முதல் 2025 வரையிலான காலப்பகுதிக்குரியதாகப் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய அனுமதிப்பத்திர வருமானம் ரூபா 2,004,100 உம் தாமதக் கட்டணங்கள் ரூபா 342,800 உம் மீளாய்வாண்டு முடிவுறும் வரியும் அறவிட்டுக்கொள்வதற்கோ அல்லது பொருத்தமான நடவடிக்கைகளை எடுப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மாகாணங்களுக்கு இடையேயான பேருந்துகள் தொடர்பான நிலுவையான மாதாந்த அனுமதிப்பத்திர கட்டணங்கள் தொடர்பாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் 2026 ஜனவரி 13 திகதிய NTC/OP/PA/18/156 இலக்க கடிதத்தின் வழியே நிலுவை அறவீடு சம்பந்தமாக முகாமைத்துவப் சபைக்குச் சமர்ப்பித்துத் தீர்மானம் பெற்றுக்கொடுக்கப்படவுள்ளது. | நிலுவை வருமானங்களை அறவிட்டுக்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | 2019 ஆம் ஆண்டு முதல் 2022 வரை உள்ள காலப்பகுதிக்குரியதாகப் பெற்றுக்கொள்ள வேண்டிய மேலதிகப் போக்குவரத்துச் சுற்றுக்கான வருமானம் ரூபா 2,294,800 மற்றும் தாமதக் கட்டணம் ரூபா 658,100 என்பன மீளாய்வாண்டின் போது அறவிட்டுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மேலதிகப் போக்குவரத்துச் சுற்றுக்கான நிலுவை மீதிகள் தொடர்ச்சியாக வருவதைத் தவிர்ப்பதற்காகப் பேருந்து உரிமையாளரின் வேண்டுகோளைக் கருத்திற்கொண்டு ஒரு தடவையில் மேலதிகப் போக்குவரத்துச் சுற்றுக்கான அனுமதிப்பத்திரத்தை 03 மாதங்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், நிலுவை மீதியைத் தள்ளுபடி செய்வதற்காகக் குழுவொன்று நியமிக்கப்பட்டு அவற்றின் பரிந்துரைகளுக்கு இணங்க மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளது. | நிலுவை வருமானங்களை அறவிட்டுக்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | சாரதி பயிற்சிப் பாடசாலையில் 2025 ஆம் ஆண்டில் ரூபா 1,297,309 நட்டமொன்று காணப்பட்டது. 2024 ஆம் ஆண்டில் சாரதி பயிற்சிப் பாடசாலைக்குப் பயிற்சியாளர்கள் 157 பேர் உள்வாங்கப்பட்டிருந்த போதிலும் 2025 ஆம் ஆண்டில் பயிற்சியாளர்கள் 85 பேர் மாத்திரம் பயிற்சிக்காக உள்வாங்கப்பட்டிருப்பது வருமானம் குறைவடைவதற்குக் காரணமாக அமைந்திருந்தது | பயிற்றுவிப்பாளர் பெருமக்களின் பற்றாக்குறையானது இச்சமூகப் பிரச்சினைக்குக் காரணமாக அமைவதுடன், தற்பொழுது சாரதி பயிற்சிப் பாடசாலைக்காக ஒதுக்கப்பட்டுள்ள வாகனங்கள் 25 ஆண்டுகள் மாத்திரம் பழைமையான வாகனங்களென்பதுடன் இடைவிடாது பழுதுகள் ஏற்படுவதனால் பழுதுபார்ப்புப் பணிகளுக்காக அனுப்பி நீண்ட காலம் காத்திருக்க வேண்டியுள்ளமையினால் பயிற்சியாளர்களுக்கான செய்முறைப் பயிற்சிக்காகப் பிரச்சினைக்குரிய சூழ்நிலையொன்று தோற்றுவிக்கப்பட்டிருப்பதாக | பயிற்றுவிப்பாளர்களை ஆளமர்த்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதுடன் பயிற்சியாளர்களின் தொகையை அதிகரித்துக்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் |

### 1.5.22.3 செயலற்ற மற்றும் குறைந்த பயன்பாட்டிலுள்ள சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2025 ஆம் ஆண்டு சாரதிப் பயிற்றுநர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்காக நேர்காணல்கள் நடாத்தப்பட்ட போதிலும், சாரதிப் பயிற்றுநர் அனுமதிப்பத்திரம் இருப்பினும் ஆட்சேர்ப்புச் சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகளைக் கொண்ட எந்தவொரு உத்தியோகத்தரும் சமூகம் அளிக்காமையின் காரணமாக, அப்பதவிக்கு உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்புச் செய்ய முடியாமல் இருந்தது. ஆள்சேர்ப்புச் சேவைப் பிரமாணக் குறிப்பைத் திருத்தம் செய்தோ அல்லது அனுமதிப்பத்திரத்தைக் கொண்ட பயிற்றுநர் ஒருவரை ஆட்சேர்ப்புச் செய்தோ செயற்படத் தவறியதன் காரணமாக, சாரத பயிற்சிப் | சாரதிப் பயிற்றுநர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்காகப் பத்திரிகைகளில் விளம்பரங்கள் பிரசுரிக்கப்பட்டு, ஆட்சேர்ப்புச் சேவைப் பிரமாணக் குறிப்புடன் தொடர்புடைய கல்வித் தகுதிகள் பூர்த்தி செய்யப்படாதிருந்தமையின் காரணமாக, நேர்காணல் சந்தர்ப்பங்கள் இரண்டில் விண்ணப்பதாரர்களைத் தெரிவு செய்ய முடியவில்லை. எனவே, ஆட்சேர்ப்புச் சேவைப் பிரமாணக் குறிப்பைத் திருத்தம் செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், பாரவூர்தி அனுமதிப்பத்திரங்களை வழங்கும் நடவடிக்கைகளை ஆரம்பிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. தற்போது குறித்த பேருந்து பல்வேறு நிறுவனங்களுக்கு விசேட | சாரதிப் பயிற்றுநர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதுடன், செயலற்று இருக்கும் பேருந்தைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| பீடத்தின் செயற்பாடுகளைப் பேணிச் செல்வதில் முடியாத நிலை தோன்றியிருந்தது. 2025 ஆம் ஆண்டு நிறைவடையும் பொழுதும் சாரத பயிற்சிப் பீடத்தின் பயிற்சி நடவடிக்கைகளுக்காக 2006 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த, மதிப்பீட்டு பெறுமதி ரூபா 1,500,000 ஆன பேருந்து செயற்பாடின்றி செயலற்று இருந்தது. | சுற்றுலாக்களுக்காகச் சலுகைக் விலையின் கீழ் போக்குவரத்து வசதிகளை வழங்கும் செயற்பாடுகளுக்காகப் பயன்படுத்தப்பட்டு வருவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. | |

## 1.5.23 வடமேல் அபிவிருத்தி அதிகார சபை

### 1.5.23.1 நோக்கங்களுக்குப் புறம்பான செயற்பாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வடமேல் மாகாண சபையின் 1993 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க வடமேல் அபிவிருத்தி அதிகார சபைப் பிரமாணச் சட்டத்தின் I ஆம் பகுதியின் 04 ஆம் பந்தியின் கீழ் (அ) முதல் (ஏ) வரை 10 நோக்கங்கள் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அதிகார சபையானது அவற்றுள் 2 நோக்கங்களைத் தவிர ஏனைய 8 நோக்கங்களை நிறைவேற்றுவதற்குப் பதிலாக, அவற்றுக்குப் புறம்பாக வடமேல் சுற்றுலா ஹோட்டல் பாடசாலையின் பயிற்சிகளின் கீழ் பல்வேறு பாடநெறிகளை நடாத்துதல், உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு மென்பொருட்களை வழங்கி நிறுவுதல் மற்றும் பராமரித்தல், அதிகார சபை வசம் உள்ள சொத்துக்களை வாடகைக்கு விடுதல் போன்ற பல்வேறு கருத்திட்டங்களை மேற்கொண்டு வருவதுடன், அத்தகு வேலைத்திட்டங்களை தனது நோக்கங்களுக்குள் உள்வாங்கி | வடமேல் அபிவிருத்தி அதிகார சபையின் நோக்கங்களும் செயற்பாடுகளும் தற்காலத்திற்குப் பொருத்தமான வகையில் அமைத்துக் கொள்வதற்காகப் பிரமாணச் சட்டத்தைத் திருத்தம் செய்வதற்குரிய வரைபுகள் தயாரிக்கப்பட்டுள்ளன. எனினும், தற்போது மாகாண சபை செயற்பாட்டில் இல்லாமையினால் எதிர்கால நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாமல் போயுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. | தற்போதைய செயற்பாடுகளுக்குப் பொருத்தமான வகையில் அதிகார சபையின் பிரமாணச் சட்டத்தின் நோக்கங்களைத் திருத்தம் செய்து கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

அதிகார சபையின் பிரமாணச் சட்டத்தைத் திருத்தம் செய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.5.24 வடமேல் மனித வள மேம்பாட்டு அதிகார சபை

#### 1.5.24.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2008 ஆம் ஆண்டு முதல் மீளச் செலுத்தும் காலம் 3 மற்றும் 5 வருட காலப்பகுதிகளின் கீழ் அபேக்ஷா தனிநபர் கடன் திட்டத்தின் மூலம் நபர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 3,250,000 கடன் தொகைக்குரியதாக 2026 மார்ச் 31 ஆம் திகதியன்று ரூபா 1,297,179 கடன் தவணை நிலுத் தொகையும், ரூபா 287,813 வட்டி நிலுத் தொகையும் காணப்படுவதுடன், நிலுவைத் தவணைத் தொகையானது 02 க்கும் 57 க்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது. சில நபர்களின் கடன் காலப்பகுதி கடந்து சென்றிருந்த போதிலும் மீளாய்வு ஆண்டு முடிவுறும் வரியும் அத்தகைய கடன் மீதிகள் அறவிடப்பட்டிருக்கவில்லை என்பதுடன், அதற்காகத் தேவையான நடவடிக்கைகள் அதிகார சபையினால் போதுமான அளவில் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவைகளைக் கடன் அறவிட்டுக்கொள்வதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. | கடன் தவணை நிலுத் தொகைகளையும் வட்டித் தொகைகளையும் அறவிட்டுக்கொள்வது தொடர்பான நடவடிக்கைகளை விரைவுபடுத்த வேண்டும்.. |
| (ஆ) | அதிகாரியினால் கவேஷணீ தனிநபர் கடன் கருத்திட்டத்தின் கீழ் 2009 ஆம் ஆண்டு முதல் 2023 வரை 19 நபர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 3,450,000 கடன் தொகையுடன் தொடர்புடையதாக, 05 க்கும் 59 க்கும் இடைப்பட்ட தவணை நிலுவைகளும் நிலுவப்புக் கடன் வட்டியும் ரூபா 2,196,562 மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டின் முடிவில் நிலுவையாகக் காணப்பட்டது. | தனிநபர் கடன் பிணையாளர்களின் சம்பளத்திலிருந்து அறவிட்டுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமையினால் தற்போது அறவிடப்பட்டு வருவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. | நிலுவையாக உள்ள கடன் தவணைத் தொகைகளையும் வட்டித் தொகைகளையும் அறவிட்டுக்கொள்வது துரிதப்படுத்தப்பட வேண்டும் |

## 1.5.25 வடமேல் இயந்திர உபகரணங்கள் அதிகார சபை

### 1.5.25.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வாடைக் கட்டணம், திருத்தக் கட்டணம், சேவைக்கட்டணம் மற்றும் குடிசார் வேலைக் கட்டணம் என்பனவற்றின் ஊடாக மீளாய்வாண்டு நிறைவடையும் போது கிடைக்கப்பெற வேண்டிய மீதியாக ரூபா 66,869,546 காணப்பட்டதுடன், அதிலிருந்து 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலப்பகுதியிலிருந்து தொடர்ச்சியாக நிலவிவரும் மீதியான ரூபா 10,071,548 கடன் மீதியைத் தீர்த்துக்கொள்வதற்கு அல்லது வேறு பொருத்தமான நடவடிக்கை எடுப்பதற்கு மீளாய்வாண்டு நிறைவடையும் போது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2026 ஏப்ரல் 30 ஆம் திகதியளவில் ரூபா 49,991,981 தொகை அறவிடப்பட்டுள்ளதுடன், ரூபா 16,877,564 தொகை தொடர்ந்தும் கிடைக்கப்பெற வேண்டிய நிலுவைத் தொகையாகக் காணப்படுகின்றது. 20 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழைய வாடைக் கட்டணக் கடன் மீதிகளின் கூட்டுத்தொகையாக ரூபா 7,049,984.87 தொகையை அறவிட்டுக்கொள்வதில் காணப்படும் சிரமத்தின் காரணமாக, அதிகார சபையின் பணிப்பாளர் சபையின் வேண்டுகோளின்படி பிரதி பிரதம செயலாளரின் அனுமதியுடன் திரட்டிய இலாபத்திற்கு எதிராகத் தள்ளுபடி செய்வதற்கு உள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. | கிடைக்கப்பெற வேண்டிய மீதியை அறவிட்டுக்கொள்வதற்குத் துரிதமாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | 2025 திசெம்பர் 08 ஆம் திகதியளவில் அதிகார சபையின் ஏனைய 9 பதவிகளுடன் தொடர்புடைய அங்கீகரிக்கப்பட்ட ஆளணி 53 ஆக இருந்ததுடன், உண்மையான ஆளணி 22 ஆகக் காணப்பட்டமையினால் 9 பதவிகளுடன் தொடர்புடைய 31 உத்தியோகத்தர்களின் வெற்றிடங்கள் காணப்பட்டன. | பதில் சமர்ப்பிக்கப்படவில்லை. | தேவைப்பாட்டைக் கருத்திற்கொண்டு பதவிகளுக்கான வெற்றிடங்களுக்கு அனுமதி பெற்றுக்கொண்டு புதிய ஆட்சேர்ப்புகளைத் துரிதப்படுத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 1.5.25.2 சொத்து முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் முடிவில் கருவிகள் மற்றும் உபகரணங்களின் மீதியானது ரூபா 28,705,629 ஆக இருந்ததுடன், அவ்மீதிக்குள் ADB நன்கொடைகளின் கீழ் ரூபா 17,974,616 பெறுமதியான உபகரணங்களின் மீதி காணப்பட்ட போதிலும், அவ் உபகரணங்களை மதிப்பீடு செய்து இனங்கண்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | ADB நன்கொடைகளாகப் பெற்றுக்கொண்ட ரூபா 17 மில்லியன் பெறுமதியான உபகரணங்களில் ஒரு பகுதி இனங்காணப்பட்டு 2026 ஆம் ஆண்டில் மீள்மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதுடன், ஏனைய உபகரணங்களை இனங்கண்டு மீள்மதிப்பீடு செய்வதற்குரிய அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. | மீள்மதிப்பீட்டை மேற்கொண்டு சொத்துக்களின் சந்தைப் பெறுமதியை இனங்கண்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 1.5.25.3 வாகனப் பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அதிகார சபையின் செலவு ரூபா 7,275,000 ஆன 11 வாகனங்களும், செலவு ரூபா 2,055,000 ஆன 04 இயந்திரங்களும் பாவனைக்கு உகந்ததற்ற நிலையில் காணப்படுவதுடன், அவ்வாகனங்களும் இயந்திரங்களும் ஏலத்தில் விடுவதற்கு அல்லது பொருத்தமான நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அதிகார சபையினால் குழுவொன்று நியமிக்கப்பட்டு, பாவனைக்கு உகந்ததற்ற மற்றும் திருத்தம் செய்வது பொருளாதார ரீதியில் பயனுள்ளதல்லாத இயந்திரங்களையும் வாகனங்களையும் இனங்காண்பதற்காகக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும், நடப்பாண்டில் அவ்வியந்திரங்களையும் வாகனங்களையும் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. | பாவனைக்கு உதவாது மட்டத்தில் காணப்படும் இயந்திரங்களையும் வாகனங்களையும் அகற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 1.5.25.4 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஆட்டவணை கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 13.3 ஆம் பந்தியின் பிரகாரம் பதில் நியமனமொன்று செய்யப்படுவது நிரந்தர நியமனமொன்று வழங்கும் வரை தற்காலிகத் தீர்வாக மாத்திரமே இருக்க வேண்டும் என்பதுடன், அப்பதவிக்காக முழுநேர அலுவலர் ஒருவரின் சேவை அவசியமாகுமாயின் நிரந்தர நியமனம் தாமதமின்றிச் செய்யப்பட வேண்டும் என்பதுடன், நிரந்தர அலுவலர் ஒருவர் அவசியமில்லையாயின் அதிகார சபையின் ஏனைய அலுவலர்களிடையே கடமைகளைப் பங்கீடு செய்தல் வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அதிகார சபையின் முகாமைத்துவப் பணிப்பாளர் பதவிக்கு 10 ஆண்டுகளாக நிரந்தர அடிப்படையில் பொருத்தமான நபர் ஒருவரை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2026 மார்ச் 17 திகதிய பிரதி பிரதம செயலாளரின் கடிதத்தின் மூலம் முகாமைத்துவப் பணிப்பாளர் பதவிக்காக ஆட்சேர்ப்புச் செய்வதற்கு அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளதுடன், ஆட்சேர்ப்புச் செய்வதற்கு அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. | உயர் முகாமைத்துவ மட்டப் பதவிக்காக நிரந்தர அலுவலர் ஒருவரை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.5.26 வடமேல் பிரதேச வள அபிவிருத்தி அதிகார சபை

### 1.5.26.1 முகாமைத்துவ செயற்றிறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் அதிகார சபையின் செயற்பாட்டுத் திட்டத்தின்படி, இழைய வளர்ப்பு ஆய்வுகூடத்தினால் 18,000 வாழை மரக்கன்றுகளும் 100 அலங்கார மற்றும் மருந்துச் செடிகளும் உற்பத்தி செய்வதற்குத் திட்டமிடப்பட்டிருந்த | 2025 ஆம் ஆண்டின் செயற்பாட்டுத் திட்டத்தில் உள்வாங்கப்பட்டிருந்த 1,800 வாழைக்கன்றுகள் உட்பட ஏனைய கன்றுகளும் தாங்களாகவே உற்பத்தி செய்தவை அல்லவென்றும், அவை அவ்வாறு வெளிவாரியான | செயற்பாட்டுத் திட்டத்திற்கு அமையத் திட்டமிடப்பட்ட பணிகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | போதிலும், ஆண்டின் இடையில் 761 வாழை மரக்கன்றுகளும் 49 அலங்கார மற்றும் ஏனைய மிளகாய்க் கன்றுகளும் மட்டுமே உற்பத்தி செய்யப்பட்டிருந்தன. கணக்காய்வு நாளான 2026 ஜனவரி 05 ஆம் திகதியளவில் கூட திசு வளர்ப்பு கருத்திட்டம் செயற்பாடற்ற நிலையில் காணப்பட்டது. | நிறுவனங்களிடமிருந்து கொள்வனவு செய்து விற்பனை செய்வதற்குத் திட்டமிடப்பட்டிருந்தவை என்றும், பின்னர் வெளிவாரியான நிறுவனங்களிடமிருந்து கொள்வனவு செய்து விற்பனை செய்வதும் பயனுள்ளதல்லாதது மற்றும் ஆபத்தானதாக இருந்தமையினால் குறித்த செயற்பாடும் நிறுத்தப்பட்டதுடன், தற்போதுள்ள பயிர்வீட்டு அலகுகளுக்குள் மிளகெண்ணெய் (மிளகாய்) பயிர்செய்கை ஆரம்பிக்கப்பட்டு அதன் அறுவடை நடுகை செய்யப்பட்டு விற்பனை செய்யப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. | |
| (ஆ) | 2001 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க வடமேல்ப் பிராந்திய வளங்கள் அபிவிருத்தி அதிகார சபைப் பிரமாணச் சட்டத்தின் நோக்கங்களையும் குறிக்கோள்களையும் நிறைவேற்றிக் கொள்வதுடன் தொடர்புடையதாக, அப்பிரமாணச் சட்டத்தின் 5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகளுள் 4 செயற்பாடுகளை நிறைவேற்றிக் கொள்வதற்கான அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2025 ஆம் ஆண்டில் வடமேல் மாகாண விவசாய மற்றும் மீன்பிடி அமைச்சினுடன் இணைந்து மாகாணத்தின் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் அத்துடன் களப்பு பிரதேசவாசிகளுக்கும் கண்டல் காடுகள் பாதுகாப்பு, மீன்பிடித் தொழிலைத் தொடர்ச்சியாகப் பேணிச் செல்லல், சூழல் பாதுகாப்பு போன்ற விடயங்கள் தொடர்பாக விழிப்புணர்வூட்டும் 15 இற்கும் மேற்பட்ட நிகழ்ச்சிகள் 2025 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்டுள்ளதுடன், மேலும் மீன்பிடிப் பெண்களை வலுவூட்டும் 10 நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. | பிரமாணச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களையும் குறிக்கோள்களையும் நிறைவேற்றிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 2001 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க வடமேல்ப் பிராந்திய அபிவிருத்திப் பிரமாணச் சட்டத்தின் (23) 1 ஆம் பிரிவின்படி அதிகார சபையின் பிரதம நிறைவேற்று அதிகாரியான முகாமைத்துவப் பணிப்பாளர் முழுநேரமாகச் சேவையில் ஈடுபடக்கூடிய நபரொருவரைப் பணிப்பாளர் சபை நியமிக்க | 2026 ஆம் ஆண்டு மே மாதம் 25 ஆம் திகதி முதல் வேறொரு அலுவலர் இச்சபையின் முகாமைத்துவ பணிப்பாளர் பதவியின் பதில் கடமைகளைப் பொறுப்பேற்பதற்காக நியமிக்கப்படவுள்ளதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது. | 2001 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க வடமேல்ப் பிராந்திய அபிவிருத்திப் பிரமாணச் சட்டத்தின் (23) 1 ஆம் பிரிவின் பிரகாரம் அதிகார சபையின் முகாமைத்துவப் பணிப்பாளர் நியமிக்கப்பட வேண்டும் என்பதுடன், மத்திய அரசாங்க சேவையில் முழுநேரச் சேவையில் ஈடுப்பட்டுவரும் |

| | | |
|---|---|---|
| வேண்டும் எனினும், விவசாய, நில, நீர்ப்பாசன, மீன்பிடி, விலங்கின உற்பத்தி மற்றும் சுகாதாரம் மற்றும் கமநல சேவைகள் அமைச்சுச் செயலாளரால் 2017 ஜுன் 01 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் அன்றைய விவசாய அமைச்சின் பிரதி திட்டமிடல் பணிப்பாளர், முகாமைத்துவப் பணிப்பாளர் (பதில்) பதவிக்கு நியமிக்கப்பட்டிருந்தார். முகாமைத்துவப் பணிப்பாளர் 2025 மார்ச் 24 ஆம் திகதி முதல் விவசாய அமைச்சிலிருந்து (வடமேல்) கனேவத்த பிரதேச செயலகத்திற்கு இடமாற்றம் பெற்றுச் சென்று பின்னர் பன்னலை பிரதேச செயலகத்தின் திட்டமிடல் பணிப்பாளராக நிரந்தரப் பதவியின் கடமைகளை நிறைவேற்றிக்கொண்டு 2026 மே 25 ஆம் திகதி வரை அதிகார சபையின் முகாமைத்துவப் பணிப்பாளர் (பதில்) பதவியில் செயற்பட்டிருந்தார். | | உத்தியோகத்தர் ஒருவர் மாகாண சபை நிறுவனம் ஒன்றில் பதில் கடமைகளில் சேவையில் ஈடுபடுத்துவது தொடர்பாகப் பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர்கள் அது தொடர்பாகக் கவனம் செலுத்த வேண்டும் |

## 1.5.27 வடமேல் மாகாண ஜனகலா மன்றம்

### 1.5.27.1 முகாமைத்துவ செயற்றிறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 13.3 ஆம் பிரிவிற்கும் மற்றும் வடமேல் மாகாண சபையின் செயன்முறை விதிக் கோவையின் IX ஆம் அத்தியாயத்தின் 113 II இன் பிரகாரமும் பதில் நியமனமொன்று செய்யப்படுவது நிரந்தர நியமனமொன்று வழங்கும் வரை தற்காலிகத் தீர்வாக மாத்திரமே இருக்க வேண்டும் என்ற போதிலும், | அப் பதவிகளுக்காக வெளியில் இருந்து நிரந்தரமாக ஆட்சேர்ப்புச் செய்வதற்குப் பெருமளவிலான செலவை ஏற்க வேண்டியுள்ளமையினால், வெற்றிடமாகியுள்ள வடமேல் ஜனகலா மன்றத்தின் பணியாளர் அலுவலர் பதவிகளுக்காக வடமேல் ஜனகலா மன்றத்தின் பணிப்பாளர் சபைத் தீர்மானங்களின் பிரகாரம் பதில் கடமைகளுக்காக நியமிக்கப்பட்டுள்ளதாகக் | உதவிப் பணிப்பாளர் (நிதி) தவிர்ந்த ஏனைய பணியாளர் பதவிகள் எதற்கேனும் ஒரு பதவிகளுக்காவது நிரந்தர அலுவலர் ஒருவரை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| ஜனகலா மன்றத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர், இரண்டு உதவிப் பணிப்பாளர் பதவிகள் மற்றும் நிர்வாக அலுவலர்கள் ஆகிய 4 மாவட்ட (பணியாளர்) பதவிகளுக்காக 20 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலப்பகுதிக்கு பதில் அலுவலர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். 2025 திசெம்பர் 31 ஆம் திகதியளவில் சேவையில் ஈடுப்பட்டிருந்த மூன்று பணியாளர் அலுவலர்களும் கூட 03 ஆண்டுகள் முதல் 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலப்பகுதிக்குப் பதில் கடமைகளை ஆற்றியிருந்தனர். | குறிப்பிடப்பட்டுள்ளது. | |

### 1.5.27.2 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

| **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| 2005 ஆம் ஆண்டு செப்டம்பர் 01 ஆம் திகதி முதல் “ஜனகலா“ உணவகம் கொள்வனவு நடவடிக்கை எதனையும் மேற்கொள்ளாமல், உணவகக் கட்டிடம் பழுதடைந்த நிலையில் காணப்படுவதாகக் குறிப்பிட்டு, ஒரேயொரு குத்தகைதாரருக்கு 20 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலப்பகுதிக்குக் குத்தகைக்கு வழங்கப்பட்டுப் பேணிச் செல்லப்பட்டிருந்தது. குருநாகல் நகரில் கண்டி வீதியை நோக்கியவாறு அமைந்துள்ள இந்த உணவகமானது நீண்ட காலமாகப் பிரபலமாக விளங்கும் ஒரு உணவகமாகும். எனினும், பழுதடைந்த நிலை தொடர்பாக முறையான பரிசோதனை இன்றியும், நவீனமயமாக்க வேண்டிய தேவைப்பாடு தொடர்பில் மதிப்பீடு இன்றியும், குறைந்த மதிப்பீட்டு குத்தகைக்கு விடப்பட்டமையால் 20 ஆண்டுகள் பூராகவும் ஈட்டியிருக்கக்கூடியதாக இருந்த குத்தகை வருமானம் ரூபா 20,140,038 ஆகும். | பணிப்பாளர் சபைத் தீர்மானங்களின் பிரகாரம் வருமானம் உருவாக்கப்பட்டு வருவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. | கொள்வனவு நடவடிக்கைகளுக்கு அமையக் குத்தகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 1.5.28 குழந்தை பருவ கல்வி அபிவிருத்தி அதிகார சபை

### 1.5.28.1 முகாமைத்துவ செயற்றிறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க குழந்தை பருவ கல்வி அபிவிருத்தி அதிகார சபைப் பிரமாணச் சட்டத்திற்கும் அதனுடன் தொடர்புடையதாக வெளியிடப்பட்ட 2005 ஜீன் 03 திகதி 1395/25 ஆம் இலக்கக் கட்டளைத் தொடரின் III ஆம் அத்தியாயத்தின் 01 ஆம் பிரிவின் பிரகாரம், வடமேல் மாகாணத்திற்குள் 3 - 5 வயதுக்கு இடைப்பட்ட பிள்ளைகளுக்காகப் பேணிச் செல்லப்படும் குழந்தை பருவ கல்வி அபிவிருத்தி நிறுவனங்கள் பதிவு செய்யப்பட வேண்டும் எனினும், 2026 பெப்ரவரி 17 ஆம் திகதியளவில் வடமேல் மாகாணத்திற்குள் நடாத்திச் செல்லப்படுகின்ற 2102 முன் பருவ பாடசாலைகள் 615 முன் பருவ பாடசாலைகள் பதிவு செய்யப்படாமல் வடமேல் மாகாணத்திற்குள் செயற்பாட்டில் இருந்தன. அது தொடர்பாக அதிகார சபையின் மேற்பார்வை மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் எவையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அனைத்துப் முன் பருவ பாடசாலைக்கும் பதிவைப் பூர்த்தி செய்து கொள்ளுமாறும், அதன் பின்னர் ஒவ்வொரு இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை பதிவைப் புதுப்பித்துக் கொள்ளுமாறும் அறிவித்துக் கடிதம் ஒன்றை வெளியிடுவதுடன், அதற்கமையச் செயற்படாத முன் பருவ பாடசாலைகள் தொடர்பாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் எவை என்பதைக் கண்டறிவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. | வடமேல் மாகாணத்திற்குள் செயற்படும் முன் பருவ பாடசாலைகள் ஒழுங்குபடுத்துவதற்கும் மேற்பார்வை செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.28.2 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2012 ஓகஸ்ட் 14 திகதிய இலக்க DMS/D/2/93/25/12 இன் முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தின் பணிப்பாளர் | விரைவில் குறித்த பிரமாணக் குறிப்புக்களை அங்கீகரித்துக்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகக் | அங்கீகரிக்கப்பட்ட பதவிகளுக்காக ஆட்சேர்ப்புப் பிரமாணக் குறிப்புக்களை அங்கீகரித்துக்கொள்வதற்கு |

| | | |
|---|---|---|
| நாயகத்தின் கடிதத்தின் 06 ஆம் பந்தியின்படி, ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வுப் பிரமாணக் குறிப்புக்கள் கணக்காய்வு நாளான 2026 பெப்ரவரி 13 ஆம் திகதியளவில் கூட அங்கீகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறிப்பிடப்பட்டுள்ளது. | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.29 வடமேல் மாகாண முதலமைச்சு நிதியம்

#### 1.5.29.1 செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வடமேல் மாகாணத்தின் 1990 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க முதலமைச்சர் தாபனப் பிரமாணச் சட்டத்தின் 06 ஆம் பிரிவின்படி, தாபன நிதியைப் பயன்படுத்தக்கூடிய செயற்பாடுகளாக வடமேல் மாகாணத்திற்குள் வறுமைக்கு நிவாரணம் அளித்தல், வடமேல் மாகாணத்தில் கல்வியை அல்லது அறிவை வளர்த்தல், வடமேல் மாகாணத்திற்குள் மதத்தை மேம்படுத்தல் மற்றும் வடமேல் மாகாணத்திற்காகச் சேவை செய்த நபர்களுக்குக் கொடுப்பனவு வழங்குதல் அல்லது வடமேல் மாகாணப் பொதுமக்களின் நலன்புரி அல்லது நன்மை கருதி வேறு சில செயற்பாடுகளுக்காகப் பயன்படுத்தப்பட வேண்டும் என்பதுடன், 2024 அக்டோபர் 11 ஆம் திகதியன்று நடைபெற்ற முதலமைச்சர் தாபன நிதிப் பரிபாலனக் குழுவில் கல்வி மற்றும் விளையாட்டு நடவடிக்கைகளுக்காக உதவிகளை வழங்குதல் ஆகிய விடயங்களுக்காக முன்னுரிமை வழங்கிச் செயற்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டிலும் கூட, வைத்திய உதவிகளாக 14 பயனாளிகளுக்கு | முதலமைச்சர் நிதியத்திலிருந்து உதவிகளைப் பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படும் முறையின் பிரகாரம் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுவதால், மீளாய்வாண்டில் உரிய நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டு வைத்திய உதவிகளுக்காக வேண்டுகோள்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளமையினால் குறித்த உதவிகளை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. | பிரமாணச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய செயற்பாடுகளுக்காகவும் நிதியத்தைப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

ரூபா 1,200,000 வழங்கப்பட்டதைத் தவிர வேறு எந்தவொரு செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 1.5.30 வடமேல் மாகாண விவசாய அமைச்சின் கீழ் விவசாய தொழில் முயற்சியாளர் அபிவிருத்தி சுழற்சி நிதியம்

#### 1.5.30.1 செயற்பாட்டு செயற்றிறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வடமேல் மாகாண விவசாய அமைச்சின் விவசாயத் தொழில்முயற்சி சுழற்சி கடன் நிதியத்திலிருந்து விவசாயிகள் செய்கைகளை மேற்கொள்வதற்காக 2025 ஆம் ஆண்டில் 611 கடன் விண்ணப்பங்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும், அதில் கடன்கள் வழங்கப்பட்ட கடன் விண்ணப்பங்களின் எண்ணிக்கை 271 ஆகும். அதாவது 56 சதவீதமானோர் இச்சுழற்சி கடன் நிதியத்திலிருந்து கடன்களைப் பெற்றுக்கொள்வதற்கு முன்வந்திருக்கவில்லை. அதாவது ரூபா 225.10 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், அதில் ரூபா 102.135 மில்லியன் தொகை மட்டுமே பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கமைய திட்டச் செயல்திறனை நூறு சதவீதமாக அடைந்துகொள்வதற்குத் தவறியிருந்தது | 2025 ஆம் ஆண்டில் விவசாய அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட 611 பயனாளிகளுக்கு இடையில் 271 பயனாளிகளுக்கு ரூபா 102,135,000 கடன் தொகையானது வழங்கப்பட்டிருந்தது. இக்கடன் தொகைகளை விடுவிக்கும் செயற்பாடு 2026 ஆம் ஆண்டிலும் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், எதிர்காலத்தில் தகைமை பெற்றுள்ள பயனாளிகளுக்குக் கடன்களை வழங்குவது குறித்துப் பிராந்திய அபிவிருத்தி வங்கிக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக | வங்கி முறைமையில் காணப்படும் பலவீனங்களை அடையாளம்கண்டு சுழற்சி நிதியத்தின் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வது குறித்துக் கவனம் செலுத்த வேண்டும். |

## 1.5.31 வடமேல் மாகாண நீர்ப்பாசன நிலையான பராமரிப்பு நிதியம்

### 1.5.31.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் தொடர்பு | இணங்காமை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 2014 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க வடமேல் மாகாண நீர்ப்பாசனப் பிரமாணத்தின் III ஆம் அதிகாரத்தின் 35 (1) ஆவது பிரிவு | 2025 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்ட ரூபா 9,718,400 நீர்ப்பாசனப் பராமரிப்பு நிதியத்தில் 87 சதவீதத்தினை மாகாண நீர்ப்பாசனத் திணைக்களமானது ஏனைய விவசாய அமைப்புகளுக்குச் சொந்தமான 546 கணக்குகளுக்குச் செலுத்தியுள்ளமையால், அப்பணத்தினை நீர்ப்பாசனப் பராமரிப்புகளுக்காகப் பெற்றுக்கொள்வதற்கு விவசாய அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டதனால் பராமரிப்புப் பணத்தைப் பெற்றுக்கொள்வது தாமதமடைந்திருந்தது. பிரமாணத்திற்கமைய முகாமைத்துவ அபிவிருத்திக் குழுக்களுக்குச் செலுத்தப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், குருநாகலில் அத்தகைய சங்கங்கள் 83 மட்டுமே தாபிக்கப்பட்டிருந்தன | நீர்ப்பாசனப் பிரமாணத்தின் 35 (1) ஆவது பிரிவுக்கு இணங்கக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படாமையினால் ஏற்பட்ட பலவீனங்களைத் திருத்திக் கொள்வதற்காக, **2026** ஆம் ஆண்டில் நிலையான பராமரிப்புத் திட்டத்தின்கீழுள்ள அனைத்துக் குளங்களுக்கும் நீர்ப்பாசன முகாமைத்துவ மற்றும் அபிவிருத்திக் குழுக்களை ஸ்தாபித்து, அக்குழுவின் பெயரில் அரச வர்த்தக வங்கியொன்றில் கணக்கைத் திறக்கும் நடவடிக்கைகள் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருவதாக | பிரமாணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை மீறிச் செயற்படக் கூடாது |

### 1.5.32 வடமேல் மாகாண வடமேல் கடற்தொழில் எழுச்சி சுழற்சி கடன் நிதியம்

#### 1.5.32.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் 22 பயனாளிகளுக்கு ரூபா 13,900,000 தொகையானது கடனாக வழங்கப்பட்டிருந்ததுடன், அத்தொகையைப் போல் 3 மடங்குக்கு அருகிலுள்ள தொகையானது பயனாளிகளுக்குக் கடனாக வழங்கப்படாமல் நிலையான வைப்பீடுகளாக ரூபா 41,300,000 தொகையானது சுழற்சி நிதியத்தில் தக்கவைக்கப்பட்டிருந்தது. அதற்கமைய சுழற்சி நிதியத்தின் விதித் தொகுதியின் 5 (I), (II) மற்றும் (III) இல் குறிப்பிடப்பட்டுள்ள மீன்பிடி மற்றும் அதுசார் தொழில்களில் ஈடுபட்டுள்ள தொழில்முயற்வோரின் திட்டங்களை மேம்படுத்தும் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை | 2025 ஆம் ஆண்டில் 118 பயனாளிகளுக்காக ரூபா 86,900,000 தொகையானது கடன் அங்கீகரிக்கப்பட்டு வங்கிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளதுடன், அப்பிரிவினரில் 41 பேர் ரூபா 32,800,000 கடன் தொகையைத் தற்பொழுது பெற்றுள்ளனர். 2025 ஆம் ஆண்டில் கடனுக்காக அனுப்பப்பட்ட அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் 2025 திசெம்பர் 31 ஆம் திகதியாகும் பொழுதே அக்கெடத் தொகைகளைப் பெற்றுக்கொள்ளும் செயற்பாடுகளை நிறைவு செய்து கொள்வது கடினமானது என்பதுடன், அப்பிரிவினரின் கடன் பெற்றுக்கொள்வதற்காக மீள்நிதியளிப்பு வழங்குவதற்குப் பணம் தேவைப்படும் வரை ஏற்படும் நிதி அழுத்தத்தை குறைத்துக் கொள்வதற்காக நிதியமானது நிலையான வைப்பீடுகளில் தக்கவைக்கப்பட்டுள்ளதாக | வங்கி முறைமையினூடாகக் கடன் விடுவித்தலில் ஏற்படும் தாமதங்கள் காரணமாகக் கடன் வழங்கல் தாமதமடைவதுடன், நிதியத்தை தாபித்தலின் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக வங்கி முறைமையை நெறிப்படுத்திச் செயற்பட நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் |
| (ஆ) | வடமேல் மாகாண மீன்பிடி அமைச்சினால் சலுகை வட்டி அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்ட மீன்பிடி மற்றும் அதுசார் தொழில்களில் ஈடுபட்டுள்ள தொழில்முயற்வோருக்குக் கடன்களை வழங்குவதற்காக வடமேல் மாகாண மீன்பிடிப் பிரிவின் கடற்தொழில் எழுச்சி சுழற்சி கடன் நிதியம் தாபிக்கப்பட்டுள்ளது. அதற்காக மீளாய்வாண்டில் மாகாண | 2025 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் கடன் மீதி ரூபா 13,436,277 ஆக இருந்ததுடன், அது ஆண்டில் வழங்கப்படும் கடன்களான ரூபா 13,900,000 உடனும் சேர்த்து ஆண்டு முடிவடையும் போது கடன் மீதியானது ரூபா 20,151,633 ஆக இருந்தது. இது 2025 ஆம் ஆண்டின் இறுதியில் மொத்தப் பருமனான ரூபா 66,653,617 இல் 30 சதவீதமாகும். இவீதத்தை | நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு அமைச்சும் அதேபோன்று வங்கி முறைமையும் சமமாகச் செயற்பட வேண்டும். அதற்கு முகாமைத்துவமானது நேரடியாகத் தலையீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | குறிக்கப்பட்ட அபிவிருத்தி நிதியத்தின்கீழ் கிடைத்த ரூபா 30,000,000 உம், சுழற்சி கடன் நிதியத்தின் ரூபா 15,609,781 உம், மீளாய்வாண்டின் தொடக்கத்தில் திரண்ட நிதியம் ரூபா 5,436,169 என ரூபா 51,045,950 நிதியத்தின் பருமனாகக் காணப்பட்ட போதிலும், மீளாய்வாண்டில் வழங்கப்பட்ட மொத்தக் கடன் தொகையானது ரூபா 13,900,000 ஆகவே இருந்தமையினால் கடன் வழங்கலானது மொத்த நிதியத்தில் 27 சதவீதம் என்ற மிகக் குறைந்த மட்டத்திலே காணப்பட்டது. அதற்கமைய இவநிதியத்தின் நோக்கத்தை அடைவது திருப்திகரமான மட்டத்தில் இருக்கவில்லை. | உயர்த்திப் பெற்றுக் கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் மீன்பிடிப் பிரிவினால் தற்பொழுதும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக | |
| **(இ)** | மீளாய்வாண்டில் கடற்தொழில் எழுச்சி“ சுழற்சி நிதிக் கடன் நிதியம் மூலம் 118 பயனாளிகளுக்கு ரூபா 86,900,000 கடன் அனுமதியளிக்கப்பட்டிருந்தாலும், அப்பட்டியலில் உள்ள பயனாளிகளில் 18 பேருக்கு ரூபா 11,700,000 பெறுமதியான கடன்கள் மட்டுமே 2025 ஆம் ஆண்டில் பிரதேச வளர்ச்சி வங்கியினால் வழங்கப்பட்டிருந்தது. அதற்கமைய 2025 ஆம் ஆண்டில் 118 பயனாளிகளுக்கு அனுமதிக்கப்பட்ட கடன் தொகையிலிருந்து பிரதேச வளர்ச்சி வங்கி டிசம்பர் 31 ஆம் திகதியன்று வழங்கப்படாத கடன் அளவு ரூபா 75,200,000 அல்லது 87 சதவீத பங்களிப்பாக இருந்தமையால், கடனை விரைவாக வழங்குவதற்காக சம்பந்தப்பட்ட வங்கியுடன் உரிய முறையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை | மொத்தமாக ரூபா 75,200,000 வழங்கப்படாத கடன் தொகையிலிருந்து 2025 ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட 23 கடன் பெறுநர்களுக்கு ரூபா 21,100,000 கடன் தொகையானது 2026 மார்ச் 31 ஆம் திகதியாகும் போது பயனாளிகளுக்கு விடுவிக்கப்பட்டுள்ளதுடன், எஞ்சிய ரூபா 54,100,000 க்குரிய கடன் விண்ணப்பதாரர்களில் 70 சதவீதமானோரின் கடன் விண்ணப்பங்கள் கடன் பெறும் செயற்பாட்டின் கீழ் காணப்படுகின்றன. பிணையாளர்களைத் தேடிக்கொள்வதில் உள்ள சிரமங்கள், வங்கியினால் கடன் வழங்குவதற்காகக் பரிசீலிக்கப்படும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யாமை, விண்ணப்பதாரர்களின் ஏனைய சொந்தக் காரணங்கள் போன்றவற்றுக்காகக் கடன்களைப் பெற்றுக்கொள்ளாமை தவிர்ந்த, | பயனாளிகளுக்குக் கடன்களை வழங்குவதற்குப் பயன்படுத்தப்படும் வங்கி முறைமையில் காணப்படும் பலவீனமான தொழிற்பாடு காரணமாக நீண்ட தாமதம் ஏற்படுவதனால், அமைச்சகம் அதற்குரிய தகுந்த பொறிமுறைகளைத் தயாரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் |

| | | |
|---|---|---|
| | ஏனைய விண்ணப்பதாரர்களுக்குக் கடன்களைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் வங்கியுடனான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் மீன்பிடிப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | |

**1.5.33 வடமேல் தைரிய வீட்டுக்கடன் திட்டம்**

**1.5.33.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஆளுநரின் 2021 மார்ச் 12 ஆம் திகதியிட்ட ஒப்புதலைப் பெற்ற வடமேல் தைரிய கடன் திட்டத்தின்கீழ் நன்மைகள் பகிர்ந்தளிக்கப்படுவதைக் கருத்திற்கொள்ளும் போது, திணைக்களத்தினால் முதலீடு செய்யப்படுகின்ற மீள்நிதியளிப்புக் வசதியின் மீதான வட்டி வருமானத்தில் 3/8 பங்கு (37.5 சதவீதம்) வீட்டுத் திணைக்களத்திற்கும், எஞ்சிய 5/8 பங்கு (62.5 சதவீதம்) வங்கியூக்கும் உரித்தாகின்றன. எவ்வாறாயினும், 2010 திசெம்பர் 10 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையில் நன்மைகள் பகிர்ந்தளிக்கப்படுவது குறித்துக் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, வீடமைப்புத் திணைக்களத்தினால் முதலீடு செய்யப்படுகின்ற முதலீடான 60 சதவீத தொகையின் வட்டியானது அரச அடமான முதலீட்டு வங்கிக்கும் வீட்டுத் திணைக்களத்திற்கும் இடையில் 6:2 என்ற விகிதத்தில் எனத் குறிப்பிடப்பட்டுள்ளது. இக்காரணங்கள் தொடர்பில் திருத்தங்கள் இதுவரை | வடமேல் “தைரிய” கடன் திட்டத்துடன் தொடர்புடையதாக அங்கீகரிக்கப்பட்டுள்ள விதிகளுக்கு இணங்க உடன்படிக்கையைத் திருத்துவதற்கு வங்கியின் ஒப்புதல் வழங்கப்படாத காரணத்தாலும், விதித் தொகுதியானது வர்த்தமானியில் பிரசுரிக்கப்படாதிருப்பதாலும் கணக்காய்வினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ள நிலை உருவாகியுள்ளது. | அங்கீகரிக்கப்பட்டுள்ள விதித் தொகுதிக்கு இணங்க உடன்படிக்கையைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் |

மேற்கொள்ளப்படவில்லை.
அதற்கமைய கடந்த ஆண்டிலும் மீளாய்வாண்டிலும் இழக்கப்பட்ட இலாபம் முறையே ரூபா 870,595 உம் ரூபா 1,047,262 உம் ஆகும்